தமிழ் முரசு

ஆசிரியர் ம.பொ.சிவஞானம்



1951 - மே - ஜூன்

விலை 4 அணா

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டுமுரசே!

தமிழ் முரசு

தொகுதி 6 : : சென்னை 1951 மே, - ஜூன் : : பகுதி 13-14

பொருளடக்கம்

●

இலங்கைத் தமிழ் விழா		....	2
தமிழரசா - திராவிடஸ்தானா?	.... ம. பொ. சி.	....	5
நாட்டு நடப்பு	....	....	9
தமிழ் ஆட்சி (கவிதை)	ரா. பாலசுப்பிரமணியம்	....	12
இலங்கைத் தமிழர்கள்	.... 'தமிழன்'	....	14
ஒழுக்கத்தை வளர்க்க வழி என்ன?	வை. முருகன்	....	17
கன்னியர் கற்பும், காளையர் காமமும்	வி. டி. லட்சுமி	....	20
இதுதானா இலங்கை?	சு. நடேசபிள்ளை B.A., B.L.	....	26
அட்டைப்பட விளக்கம்	—	....	33
மதிப்புரை	—	....	34

★

தமிழ் முரசு

திருவள்ளுவராண்டு 1982 சித்திரை - வைகாசி

இலங்கையில் தமிழ் விழா

ஏப்ரல் 29, 30 மே 1 ஆகிய மூன்று நாட்களில், யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இலங்கை, இந்தியாவோடு தொடர்பற்ற தனியரசு நாடாயினும், யாழ்ப்பாணம் உள்பட அதன் வடபகுதி மாகாணங்களில் பெரும்பாலும் தமிழர்களே வாழுகின்றனர். மற்றும், பண்டை நாளில் இலங்கைக்கும் இந்தியத் தமிழகத்துக்கும் நெருங்கிய கலாசாரத் தொடர்பு இருந்ததாக அறிகின்றோம். இந்தியத் தமிழகத்தில், சேரன் செங்குட்டுவன் வீரக் கண்ணகிக்கு விழா நடத்தியபோது, இலங்கை வேந்தன் கயவாகுவும் வந்திருந்ததாக சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். சிலப்பதிகார காலத்திற்குப் பிறகு, மீண்டும் ஸ்தாபன ரீதியாக, இலங்கைக்கும் இந்தியத் தமிழகத்துக்கும் கலாசாரத் தொடர்பு ஏற்படுவதற்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்விழா முதல் முயற்சியாகும். இம்முயற்சியிடுலீபட்டுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். இலங்கைத் தமிழரோடு மட்டுமல்லாமல், மலேயா - பர்மா - இந்தோனேஷியா - தென்னாப்பிரிக்கா போன்ற பிறநாடுகளிலுள்ள தமிழர்களோடும், இந்தியத் தமிழர்களுக்கு கலாசாரத் தொடர்பு ஏற்பட தமிழ் வளர்ச்சிக் கழகம் பாடுபட வேண்டும்.

பல்வேறு சமயத்தவரும் தத்தம் சமயச் சாத்திரங்களை தமிழிலே யாத்தனர். வைணவருக்கு நாலாயிரப் பிரபந்தமும், சைவருக்கு தேவாரம் - திருவாசகமும், சமணருக்கு சிந்தாமணியும், பௌத்தருக்கு மணிமேகலையும், கிறித்தவருக்கு தேம்பாவணியும், இஸ்லாமியருக்கு சீறாப்புராணமும் சமய சாத்திரங்கள் மட்டுமல்ல; அவர்களது தமிழ்ப்பற்றையும் புலமையையும் விளக்கும் இலக்கியங்களுமாகும்.

இலங்கைத் தமிழ் விழாவில், ஆண் - பெண் என்ற பால் வேற்றுமையின்றி, இந்து - முஸ்லிம் - கிருத்தவர் என்ற சமய வேற்றுமையின்றி தமிழ் ஆர்வமுள்ள எல்லோரும் கலந்துகொண்டிருப்பது போற்றற்குரிய செய்தியாகும். ஆம்; தமிழ், சமய வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டது. தமிழ் இனத்தவரிலே சைவர், வைணவர், சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிருத்தவர் ஆகிய எல்லா சமயத்தவரும் உண்டு. ஆயினும், தமிழ் எந்த ஒரு சமயத்தினருக்கும் தனிவுடைமையன்று. தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டுவிட்ட தமிழ் இனத்தவர் எல்லோருக்குமே, தமிழ் தாய்மொழியாகும். ஆம்; இனம் வேறு, சமயம் வேறு. இதை மறத்தல் கூடாது.

ஆகவே, யாழ்ப்பாணத்தில் மதத்தால் வேறுபட்ட புலவர்களெல்லாம் இனஉணர்ச்சியால் ஒன்றுபட்டு ஒரே மேடையில் தோன்றி தமிழின் சிறப்பை எடுத்தோதிய காட்சி என்றென்றும் மறக்க முடியாததாகும்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் செய்துள்ள பணிகள் பலப்பல. அவற்றுள் தலையாயது - தமிழரின் பாராட்டுதலுக்குரியது - தமிழுக்கென கலைக்களஞ்சியம் தயாரிக்க முயல்வதாகும். இந்திய மொழிகள் பலவற்றுள்ளும் தமிழ்மொழியில்தான் முதன் முதலில் கலைக்களஞ்சியம் தயாரிக்கும் முயற்சி நடைபெறுகிறது. இது, தமிழர் பெருமைப்படக்கூடிய செயலாகும். ஆனால், இதுவரை செய்துள்ள பணிகளுக்காக தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரை பாராட்டும்போது, இன்னும் செய்யவேண்டிய பணிகளை நினைப்பூட்டுவதும் நமது கடமையாகும்.

பாரதம், ராமாயணம் போன்ற வடமொழிக் காவியங்களை - அக்காவியங்கள் கூறும் செய்திகளை தமிழர் ஒவ்வொருவரும் அறிவர். ஆனால் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ்க் காவியங்களின் சிறப்பை வடநாட்டார் அறிந்திலர். பண்டிதர்கள் கூட இதற்கு விதிவிலக்கல்லர். மிதிலையில் பிறந்த சீதையின் சிறப்பை தமிழர் போற்றுகின்றனர். ஆனால், பூம்புகாரிற் பிறந்த கண்ணகி செய்த மாபெரும் புரட்சியை வடநாட்டார் அறிந்திலர்.

காளிதாசனின் புலமையை, சிவாஜியின் வீரத்தை, தயானந்தரின் சீர்திருத்தத்தை போற்றிப் புகழாத தமிழர்கள் இல்லை. ஆனால், கவியரசர் கம்பரை, மாவீரன் செங்குட்டுவனை, சீர்திருத்தச் செம்மல் வள்ளலாரை வடநாட்டார் போற்றுவதில்லை. இந்த நிலை மாற வேண்டும். இந்தியா ஒன்று என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. இந்திய மக்களிடையே ஒன்றுபட்ட உள்ளம் ஏற்படுவதற்கும் வழி செய்யவேண்டும்.

வடமொழிக் காவியங்களையும் அக்காவியங்களின் வழிப்பட்ட கருத்துக்களையும் தென்னாட்டில் பரப்புவதற்கு ஆயிரமாயி

ரம் ஆண்டுகளாக வடமொழிப் புலவர்கள் பாடுபட்டு வந்திருக்கின்றனர். அதுபோன்று தமிழ் இலக்கியங்களின் பெருமையை - தமிழரின் பண்பாட்டை வடநாட்டாரிடையே பரப்புவதற்கு தமிழ்ப் புலவர்கள் எவரும் முயற்சி செய்ததில்லை. குமர குருபர சுவாமிகள் அம்முயற்சியை துவக்கி வைத்ததுண்டு. ஆனால், அவருக்குப் பின் அம்முயற்சி தொடர்ந்து நடைபெறாமல் அழிந்தே போயிற்று. தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரேனும் அம் முயற்சியில் ஈடுபடுவாராக.

வெறும் இலக்கிய நயங்களை எடுத்துரைப்பதாலோ, காலஞ் சென்ற கவிஞர்களைப் பாராட்டுவதாலோ தமிழ் வளர்ந்துவிடாது. காதல் - வீரம் - கடவுள் நெறி ஆகிய துறைகளில் சிறப்பு பெற்றிருப்பது போலவே, அரசியல் - விஞ்ஞானம் - தொழில் ஆகிய துறைகளிலும் தமிழ் மறுமலர்ச்சியடைய வேண்டும். ஜனநாயகம், சர்வாதிகாரம் ஆகியவை பற்றிய நுட்பங்களையும் இந்த இரண்டு தத்துவங்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளையும் தெளிவாக விளக்கிக் கூறும் அரசியல் நூற்கள் தமிழிலே இல்லை.

சோஷலிஸம் - கம்யூனிஸம் போன்ற ‘இஸம்’களின் நுட்பங்கள், அந்த ‘இஸம்’களை யொட்டிய இயக்கங்களால் விளையும் பலன்கள் பற்றிய பொருளாதார சாத்திரங்கள் தமிழில் வரவேண்டும். என்ஜினியரிங், மருத்துவம், சட்டம் போன்ற தொழில் வழிப்பட்ட நவீன சாத்திரங்களும் தமிழில் இல்லை. இத்தகைய சாத்திர நூற்களை யாத்துத் தருவோருக்குப் பரிசுகள் வழங்குவோம் என்று பறைசாற்றுவதாலேயே நூல்கள் குவிந்துவிடாது. தமிழில் வரும் விஞ்ஞான நூல்கள் போதிய அளவிற்கு விலை போகவும் வழிசெய்ய வேண்டும். அப்போதுதான் விஞ்ஞான, தொழிலியல் ஞானமுடைய எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் பிறக்கும். மக்கள் வாங்கி படிப்பதற்கான சூழ்நிலையில்லாதபோது, வெறும் பரிசுக்காக மட்டும் விஞ்ஞான நூல்கள் வெளிவரா.

தமிழகம் தனியரசு மாகாணமாகும் போதுதான் தமிழ் அரசு மொழியாகும். அப்போதுதான் அரசியல் - பொருளாதார - விஞ்ஞான சாத்திரங்கள் தமிழில் வெளிவருவதற்கான வசதியும் வாய்ப்பும் ஏற்படும். அரசுமொழியாக்காமல் அடிமை நிலையில் வைத்துக்கொண்டே தமிழுக்கு விழா நடத்துவதால் போதிய பயன் கிட்டாது. ஆம்; தமிழின் பெருமையை விளம்பரப்படுத்தினால் மட்டும் போதாது. அதன் உரிமையை அடைவதற்குப் பாடுபட வேண்டும். தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் அத் துறையிலும் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களாக!

தொடர்ச்சி.

தமிழரசா — திராவிடஸ்தானா ?

ம. பொ. சி.

2. இலக்கிய சான்றுகள்

தமிழ் மொழி வழங்கும் நிலம் - தமிழரின் உரிமைத் திருநாடு - வேங்கடத்திற்கு வடக்கேயும் விரிந்து கிடந்ததாக பழங்காலத் தமிழ் இலக்கியம் எதுவும் சான்று கூறவில்லை,

வடக்கெல்லை விந்தியமல்ல, வேங்கடமே !

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத
தமிழ்கூறும் நல்லுலகம்"

என்ற தொல்காப்பியப் பாயிர வரிகளில், தமிழ் வழங்கும் நிலம் வேங்கடத்துக்கு வெளியே கிடையாதென்பதைத் தெளிவாக்கி விட்டார் பனம்பாரனார். தொல்காப்பியர் காலத்தவரெனப்படும் காக்கைப் பாடினி என்ற பெண்பாற் புலவர்,

"வடக்கும் தெற்கும்
குணக்கும் குடக்கும்
வேங்கடம் குமரி
தீம்புனற் பௌவமென்(று)
இந்நான்கெல்லை"

என, தாம் இயற்றிய யாப்பிலக்கண நூலில் தமிழகத்தின் எல்லைகள் இவை எனக் குறித்துள்ளார். மற்றும், சிகண்டியார் என்ற இசை நூற் புலவரும்,

"வேங்கடங் குமரித்
தீம்புனல் பௌவமென்(று)
இந்நான்கெல்லை
தமிழது வழக்கே"

எனக் குறிப்பிடுகின்றார். தமிழிசைக்கு எல்லை கூறும் இவ்வரிகள் தமிழ்மொழி வழிப்பட்ட பண்புகளுக்கும் வேங்கடமே வடக்கெல்லை என்பதை வற்புறுத்துகின்றன.

ஆந்திரம் ஆந்திரருக்கே!

வேங்கட மலையோடு தமிழகத்தின் நிலப்பரப்பு முடிவுறுவதுடன் வேங்கடத்திற்கு வடக்கே தெலுங்கு மொழி வழங்கும் வேற்று தேயமொன்றுண்டு என்பதை,

"வடதிசை மருங்கில்
வடுகு வரம்பாக"

என, 'சிறு காக்கைப் பாடினியம்' என்ற இலக்கண நூல் கூறுகின்றது. வடுகு, தெலுங்கு மொழிக்குரிய மற்றொரு பெயராகும்.

மாமூலனார் என்ற மாபெரும் புலவர் தாம் இயற்றிய சங்க நூற் பாடலில்,

"பனிபடுசோலை வேங்கடத்
தும்பர்
மொழிபெயர் தேயத்தர்"

என்ற வரிகளில், வேங்கடமலைக்கு அப்பால் தமிழ் மொழியல்லாத வேறு மொழி வழங்கும் தேயமொன்றுளதென்பதை வலியுறுத்துகின்றார். இவற்றால், சங்க காலத் தமிழ் மக்கள், இன்று தெலுங்கு தேசம் எனப்படும் வடுகர் நாட்டை தங்கள் மொழிக்கும், பண்பாட்டுக்கும், தாயகத்துக்கும்

புறம்பானதொரு தனிநாடாகவே கருதினர் என்பது விளங்கும்.

சங்க காலத்திற்கு மிகப் பிற்காலத்தில் தோன்றி, பெரிய புராணம் இயற்றிய சேக்கிழாரும்,

"அங்கண் வடதிசை மேலுங்
குடக்கின் மேலும்
அருந்தமிழின் வழக்கங்கு
நிகழாதாக"

என்ற வரிகளில் வேங்கட மலையை அடுத்துள்ள காளத்தி மலைக்கு அப்பால் தமிழ் மொழியோ, அம்மொழிவழக்கோ நிலவியதில்லை எனக் கூறுகின்றார்.

தமிழகம் தனிநாடே!

இளங்கோ யாத்த சிலப்பதிகாரம், கண்ணகி தேவியின் காவியமு மட்டுமன்று; நம் கன்னித் தமிழ் நாட்டின் வரலாற்று நூலுமாகும். சுமார் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சிலப்பதிகார காலத்தில் தமிழ்நாட்டின் எல்லைகள் யாவை? வடக்கே வேங்கட மலை; தெற்கே குமரி முனை; கிழக்கில் வங்காள குடாக்கடல்; மேற்கில் அரபிக் கடல். இந் நாற்பாங்கெல்லைக்கு உட்பட்டதுதான் தமிழ் வழங்கும் நிலம் - தமிழரின் தாயகம். இதை,

'குமரிவேங்கடம் குணகுடகடலா
மண்டினி மருங்கில்
தண்டமிழ் வரைப்பில்
- செந்தமிழ் கொடுந்தமிழ்
என்றிரு பகுதி'

* * *

'நெடியோன் குன்றமும்
தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த
தண்புனல் நாடு'

என்ற வரிகளில் வற்புறுத்துகின்றது சிலப்பதிகாரம்.

வடக்கே வேங்கட மலையும், தெற்கே குமரி முனையும் தமிழ் நிலத்தின் வரம்புகளாகத் திகழ்கின்றன எனக் குறிப்பிடுவதோடல்லாமல், அந் நிலத்திற்கு தமிழ் மொழியும் வரம்பாக இருக்கிறது என்று கூறுகின்றார் இளங்கோவடிகள். ஆம்; ஒரு பிரதேசம் மலை - கடல் போன்ற இயற்கையரண்களைக் கொண்டதனாலேயே தனி நாடாகிவிடாது. தனித்த ஒரு மொழியையும் அந்நாடு பெற்றிருக்க வேண்டும் என்று இன்றைய அரசியல் அறிஞர்கள் கூறுவதை இளங்கோவடிகள் அன்றே அங்கீகரித்திருக்கிறார்.

திராவிடமல்ல, தமிழகம்!

வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட நிலப்பரப்பை, 'திராவிடம்' என்று கூறவில்லை இளங்கோவடிகள். அலைகடலால் சூழப்பட்ட இந்நில உலகில் தமிழ் மொழி வழங்கும் நம் நாட்டிற்கு 'தமிழகம்' என்றே பெயர் என்பதை,

இமிழ்கடல் வரைப்பில்
தமிழகம்......

என்ற வரிகளில் வற்புறுத்துகிறார்.

பதிற்றுப்பத்து என்னும் நூலில் வரும்,

'இமிழ்கடல்வேலித் தமிழகம்'

என்ற வரியிலும் தமிழ்மொழிக்குரிய நிலம் 'தமிழகம்' என்றே பெயர் பெறுகின்றது.

ஒரு நாட்டின் பெயர், அந் நாட்டினர் பேசும் மொழியின் பெயராக விளங்குவது இன்றைய உலகிலும் நாம் கண்டுவரும் உண்மை. அதுபோன்றே தமிழ்மொழி வழங்கும் நம் நாடும் தமிழகம் எனப் பெயர் பெற்றதில் வியப்பில்லை.

இலக்கியம் கூறும் இந்தச் செய்திகளுக்கு மாறாக, வேங்கடத்திற்குத் தெற்கேயுள்ள தமிழ் வழங்கும் நிலம் தனிநாடு அல்லவென்றும், விந்தியம் வரை விரிந்துள்ள 'திராவிட நாட்டின் ஒரு பகுதியேயென்

றும் கூறுவோர் இலக்கிய உண்மைகளை அறியாதார் போலும்!

ஆந்திர - கன்னடரோடு கூட்டாட்சியில்லை

சிலப்பதிகார காலத்திலும் வேங்கடத்திற்கு வடக்கே தெலுங்கு, கன்னட மொழிகள் பேசப்பட்டன. அம்மொழிகள் வழங்கும் பகுதிகள் தனித்தனி நாடுகளாகவே விளங்கின. தமிழ், தெலுங்கு, கன்னட நாடுகள் ஒரே அரசின் கீழ் அடங்கியிருந்ததாக தமிழ் இலக்கியங்கள் சான்று கூறவில்லை. சோழ சாம்ராஜ்யத்தின் கீழ் ஆந்திரப் பகுதியும், விஜயநகர சாம்ராஜ்யத்தின் கீழ் தமிழ்ப் பகுதியும் அடிமைப்பட்டு இருந்ததாக வரலாற்றில் படிக்கிறோம். ஆனால், இந்த சாம்ராஜ்யங்கள் மன்னர்களின் வாள்வழி அமைக்கப்பட்டனவேயன்றி, மக்களின் மனவழி அமைக்கப்பட்டனவன்று. இது காரணமாகவே, அவை நெடுங்காலம் நிலைத்திராமல் அழிந்தொழிந்தன. அரசியலில் மட்டுமல்ல கலாசாரத் துறையிலும் இந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள் பரஸ்பரம் கலந்து வாழ்ந்ததாகத் தெரியவில்லை. தமிழ் மூவேந்தரிடையே அடிக்கடி போர் மூண்ட செய்தியை இலக்கியங்களில் காண்கிறோம். அங்ஙனமிருப்பினும், அம் மூவேந்தர்களிடையே பெண் கொள்ளல், கொடுத்தல் போன்ற குடும்ப உறவுகள் நிகழ்ந்து வந்திருக்கிறது.

இதுபோன்று ஆந்திர - கன்னடரோடு தமிழர் குடும்ப உறவு கொண்டிருந்ததாக இலக்கியங்கள் கூறவில்லை.

கேரளர், பண்டு தமிழரே!

சிலப்பதிகார காலத்தில் இன்று கேரள நாடெனப்படும் திருவிதாங்கூர், கொச்சி, மலபார் ஆகிய பகுதிகளும், குடகும் சேர நாடாகத் திகழ்ந்தன. அந்தப் பகுதிகளில் வாழ்ந்தமக்கள் தமிழ்மொழி பேசும் தமிழரேயன்றி வேறிலர். அவர்கள் பேசிய தமிழ், செந்தமிழினும் சிறிது வேறுபட்டிருந்த காரணத்தால் கொடுந்தமிழ் எனப் பெயர்பெற்றது. மிகப் பிற்காலத்தில்தான் அந்தப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ்மொழி பேசிய தமிழர்கள், மலையாள மொழி பேசும் கேரளராக மாறினர். சேரநாட்டில் வடமொழி புகுந்து அங்கு முன்னரே வழங்கி வந்த கொடுந் தமிழோடு கலந்ததன் விளைவாக, தமிழும் வடமொழியுமல்லாத மூன்றாவது மொழியாக மலையாளம் தோன்றியது. ஆகவே, கேரள நாட்டை பழைய தமிழகம் என்றும், மலையாள மொழியை தமிழின் கிளைமொழி என்றும் கூறுவதில் உண்மையிருக்கிறது. சிலப்பதிகாரமும் அதற்குச் சான்று கூறுகிறது. ஆனால், தெலுங்கும், கன்னடமும் தமிழின் கிளைமொழிகள் என்பதற்கும் அம்மொழிகள் வழங்கும் பகுதிகள் பண்டு தமிழ் நிலமாகவே திகழ்ந்தன என்பதற்கும் இலக்கியச் சான்றில்லை.

கால்டுவெல்லும் கூறுகிறார்!

மலையாளம், தமிழிலிருந்து கிளைத்த மொழியாயினும், அது இற்றைக்கு தமிழோடு தொடர்பற்ற தனித்த ஒரு மொழியாகவே விளங்குகின்றது. அதுமட்டுமல்ல; மலையாளம் தோன்றிய காலந்தொட்டு தமிழோடு அதற்குள்ள தொடர்புகள் குறைந்துகொண்டும் வடமொழியோடு தொடர்புமிகுந்து கொண்டும் வருகின்றது. மொழியாராய்ச்சியில் வல்லுநரான கால்டுவெல் கூறுவதைக் கேளுங்கள்:

"மலையாள மொழியும் அதன் பிற்கால இலக்கியங்களும் எத்துணை விரைவில் வடமொழி மய

மாக மாறிவிட்டன என்பது வியப்பையே அளிப்பதாகும். இத்துணை மாறுதலும் சென்ற இரண்டு அல்லது மூன்று நூற்றுண்டுகளுக்குள்ளாகவே ஏற்பட்டதாகும். இரண்டு அல்லது மூன்றே நூற்றுண்டு! எனினும், எத்துணை வடமொழிக் கலப்பு!! தமிழில் எவ்வளவுக்கெவ்வளவு வடமொழிக் கலப்புக் குறைவாகக் காணப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு மலையாளத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றது!!! மேலும், அதன் வரிவடிவமும் தமிழ் நாட்டில் வடமொழி எழுத்துக்களை எழுதக் கையாளப்படும் கிரந்த எழுத்துக்களின் வரிவடிவையொட்டியே வகுக்கப்பட்டதாகவும் கருதக் கிடக்கிறது. ஆகவே, தமிழிலிருந்து ஒருசிறிது வேறுபட்டிருந்த மலையாளம் படிப்படியாக வேறுபாடுகள் மிக்கதாகி தமிழின் கிளைமொழி யென்பது போய் உடன்தோன்றிய இனமொழியோ என்று கருதக் கூடியதொரு நிலையை எய்தி விட்டது. மலையாள மொழிக்குத் தமிழே தாய்மொழி என்பதில் யாதொரு ஐயமுமின்று. எனினும், மலையாள மொழி இப்போதுள்ள நிலையை நோக்கில் தாயின் தொடர்பை நீத்துத் தனிப்பட்ட வேற்றுருவைக் கொண்ட மகளொருத்தியைப் போன்றுகிவிட்டது.

எது ஆரிய நாடு?

இலக்கியங்களில் திராவிடர்-திராவிட நாடு என்ற பெயர்கள் இடம்பெறவில்லை. ஆயினும், ஆரியர் - ஆரியநாடு என்ற பெயர்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், இலக்கியங்களில் வரும் ஆரிய நாட்டிற்கும், திராவிடஸ்தானிகள் கூறும் ஆரிய நாட்டிற்கும் வேற்றுமையுண்டு. தமிழகம், கன்னடம், ஆந்திரம், கேரளம் தவிர ஏனைய இந்தியப் பெருநிலமனைத்தும் ஆரியநாடு என்கின்றனர் திராவிடஸ்தானிகள். சிலப்பதிகார காவியப்படி, ஆரிய நாடெனப்படுவது இன்று உத்திரப் பிரதேசம், எனப்படும் ஐக்கிய மாகாணம் மட்டுமேயாகும். அல்லது அதிலும் கொஞ்சம் குறைந்த அளவு பகுதியாகவோ, அல்லது சிறிதளவு கூடிய பகுதியாகவோ இருக்கலாம்.

"கொங்கணர் கலிங்கர்
  கொடுங் கருநாடர்
பங்களர் கங்கர்
  பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு..."

என வரும் சிலப்பதிகார வரிகளில் ஆரியர், கொங்கணர் - வங்காளியர் போன்ற வடவருக்கு வேறான தனி இனத்தவராகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

அந்தணர் ஆரியரன்று

தமிழ் நாட்டு அந்தணர்களை ஆரியர்கள் எனக் கூறுகின்றனர் திராவிடத்தார்கள். சிலப்பதிகாரம் உள்பட சங்கத் தமிழ் இலக்கியங்கள் எதுவும் தமிழ் நாட்டு அந்தணரை ஆரியர் எனக் கூறவில்லை. பத்துப் பாட்டில் குறிஞ்சிப்பாட்டு 'ஆரிய அரசன் பிரகதத்தனுக்காக கபிலர் பாடித்தந்தது' என்று குறிப்பிடப்படுகிறது. இந்தக் கபிலர் தமிழ் நாட்டு அந்தணர் ஆவார். ஆயினும், அவரிடம் பாடல் பெற்றவனை ஆரிய அரசன் என்று குறிப்பிடுவது போன்று, கபிலரை ஆரியப் புலவரென்று பத்துப் பாட்டைத் தொகுத்த புலவர் குறிப்பிடவில்லை.

மற்றும் சிலப்பதிகாரத்தில் அந்தணத் தமிழரும், அந்தணரல்லாத தமிழரும் வேற்றுமையின்றி ஓரினத்தவராகக் கலந்து வாழ்ந்தனர் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு.

(தொடரும்)

நாட்டு நடப்பு



திருத்தம் அவசியமே !

இந்தியக் குடியரசுச் சட்டம் அமுலுக்கு வந்து பதினாறு மாதங்களே ஆகின்றன. அதற்குள், அச்சட்டத்தின் பல பகுதிகளை - அதுவும் ஜீவாதார உரிமைகளையே திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஜமீன் ஒழிப்பு, மதுவிலக்கு, தொழில்களை தேசியமயமாக்குதல் போன்ற முற்போக்கு திட்டங்கள் எதையும் நிறைவேற்றுவதற்குத் தடையாக அமைந்துவிட்டது ஜீவாதார உரிமைகள் பற்றிய பகுதி. சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் பிற்போக்கு சக்தியின் பிரதிநிதிகளும் அரசியல்நிர்ணய மன்றத்தில் இடம் பெற்றிருந்தனர். சட்டம் வகுக்கும் சப்-கமிட்டியில் அவர்களே அதிகமாகவும் இருந்தனர். அதன் விளைவை அரசினர் இப்பொழுதுதான் தெரிந்து கொள்ள முடிந்தது.

புதிய அரசியலை இவ்வளவு சீக்கிரத்தில் திருத்தக்கூடாதென்றும் அவசியமானால், திருத்தத்தைத் தேர்தலுக்குப் பிறகு செய்துகொள்ளலாமென்றும் சிலர் கூறுகின்றனர். நியாயமான அரசியல் காரணங்களுக்காக இந்த ஆட்சேபணையை ஏற்றுக்கொள்ளலாமென்றாலும், இதனால் அதிக பலன் அடைபவர்கள் ஜமீன்தாரர்கள், வர்த்தக முதலாளிகள் போன்ற ஆதிக்க வாதிகளேயன்றி மக்கள் அல்லர். ஆகவே, திருத்தம் அவசியம் என்பதே நமது அபிப்பிராயம். எழுத்துரிமை, பேச்சுரிமை பற்றிய விதியைத் திருத்துவது பற்றிய ஆட்சேபணை சிந்திக்கத்தக்கதே. இது பற்றி, பத்திரிகையாளர் சங்க தூதுக் குழுவினர் கூறிய ஆலோசனைகளை கவனித்து ஆவன செய்வதாக பிரதமர் நேரு வாக்களித்துள்ளார். அதன்படி செய்வார் என்றும் நம்புகிறோம்.

திருத்தினால் போதாது: திட்டமும் வேண்டும்.

சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பால் கம்யூனல் ஜி. ஓ. ரத்தாகிவிட்டதால், அதனால் பாதிக்கப்பட்ட சாதியினரின் உரிமைகளைப் பாதுகாக்க வசதி செய்யுமாறு சென்னை அரசினர் மத்திய அரசினருக்கு அறிவித்திருந்தனர். அதன் விளைவாக, பிற்போக்கு சமூகத்தினரின் கல்வி நலன்களுக்கு வசதி செய்யும் இந்தியக் குடியரசு சட்டத்தின் 15-வது விதி திருத்தப்பட இருக்கிறது. திட்டமிட்டபடி திருத்தப்பட்டால், கம்யூனல் ஜி. ஓ.வின்படி கல்வித் துறையில் சலுகை பெற்றுவந்த 'பிராமணரல்லாத' சாதியினரில் பெரும்பாலானவர்களுக்கு அந்தச் சலுகையை இனியும் தொடர்ந்து பெற வாய்ப்பு கிடைக்கும். பிறப்பையொட்டிய சாதியின்பெயரால் சலுகை வழங்கப்படாமல் ஒவ்வொரு தனி மனிதனுடையவும் பொருளாதார நிலைக்

கேற்ப சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்பதே நமது கொள்கை. ஏனெனில், யாரெல்லாம் முற்பட்ட சாதியினராகக் கருதப்படுகின்றனரோ, அவர்களிலேயும் பாமரரும் பரதேசிகளும் நிறைய இருக்கின்றனர். யாரெல்லாம் பிற்பட்ட சாதியினராகக் கருதப்படுகின்றனரோ, அவர்களிலேயும் பணக்காரர்களும் படித்தவர்களும் மிகுந்திருக்கின்றனர். இந்த நிலையில் நடைமுறையில் இருந்து வரும் பிற்பட்ட சாதிப் பட்டியலால் ஏழை மக்களுக்கு நீதி வழங்கிவிட முடியாது. அதனுற்ருன், ஒவ்வொரு தனி மனிதனின் பொருளாதார நிலைமைக்கேற்ப சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்கிருேம். சாதிச் சண்டைகள் ஒழிவதற்கும் இது வழியாக அமையும். ஆனால், தேசீய முகாமிலும் சாதிவெறி வேலைசெய்ய ஆரம்பித்துவிட்ட இந்நாளில் நமது கொள்கைப்படி அரசியல் திருத்தப்படுமென்று எதிர்பார்க்க முடியாது.

எஞ்சினீயரிங், மருத்துவக் கல்லூரி போன்ற தொழிற் கல்லூரிகளை அதிகரித்துவிட்டால், கல்வித்துறையைப் பொறுத்த வரையில் கம்யூனல் ஜி. ஓ.வோ, அதுபோன்ற வேறு திட்டங்களோ தேவையிருக்காது. தேவையான அளவுக்கு எஞ்சினீயர்களும் மருத்துவர்களும் கிடைக்கவில்லை என்று அமைச்சர்கள் ஒப்பாரி வைக்கின்றனர். ஆனல், 'கல்லூரிகளை அதிகப்படுத்துங்கள்' என்ருல், அரசாங்கத்தின் செல்வநிலை சீராக இல்லை என்று கூறி கைவிரிக்கின்றனர். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டுதான் சாதி வெறியர்கள் பேயாட்டம் ஆடுகின்றனர்.

குடியரசுச் சட்டம் திருத்தப்பட்டால் மட்டும் போதாது. அந்தத் திருத்தத்தை யொட்டி உண்மையான பிற்போக்கு சாதியினர்களுக்கு நீதி வழங்கும் வகையில் திட்டம் தயாராக வேண்டும். பிராமணர்களுக்கு அடுத்தபடியில் - ஏன் - பல விஷயங்களில் அவர்களைவிட முற்போக்காக உள்ள சாதியினரெல்லாம் சாதியின் பெயரால் சலுகை கேட்பது வெட்கப்பட வேண்டிய விஷயம். ஆகவே, புதிதாக வகுக்கப்படும் பிற்போக்கு சாதியினரின் பட்டியலில் உண்மையிலேயே பின்னடைந்துள்ள சாதியினர் மட்டுமே இடம்பெற வேண்டும்.

வருந்துகிருேம்!

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி.யின் மனைவி, திருமதி மீனுட்சி அம்மையார் காலமான செய்தி கேட்டு வருந்துகிருேம். அவ்வம்மையார் ஒரு தேசீய வீரரின் மனைவி என்பதோடு, அவ்வீரர் நடத்திய விடுதலைப் புரட்சியின் எதிரொலியாக இன்னல்கள் பல அடைந்தவர். சிறையிலிருந்து கவிவடிவில் எழுதிய கடிதங்களில், இவ்வம்மையாரின் சீரிய குணங்களைப் பாராட்டியிருக்கிருர் சிதம்பரனர். தேசபக்தருக்கு வாழ்க்கைப்பட்டதன் காரணமாக, அவ்வம்மையார் வறுமையைப் பரிசாகப் பெற்ருர். எனினும், மாநிலம் போற்றும் ஒரு மாவீரருக்கு வாழ்க்கைப்படும்

வாய்ப்பு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தாரேயன்றி, வறுமையை நினைந்து வருந்தினாரில்லை. மீனாட்சியம்மையாரை இழந்து வருந்தும் அவரது மக்களுக்கும் உறவினருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவ்வீராங்கனையின் ஆவி சாந்தியுறுவதாக!

வரவேற்கிறோம் - ஆனால்.....?

பேராசிரியர் கிருபாளினி காங்கிரஸிலிருந்து வெளியேறிவிட்டார். காங்கிரசுக்குள்ளேயே தனிக்கட்சி நடத்த உரிமை கொண்டாடினார். மேலிடத்துத் தலைவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. காங்கிரஸ் அரசாங்கங்களுக்கு ஆக்கவழியில் அறிவுரை கூறும் கருத்துடன் ஜனநாயக முன்னணி அமைக்கப்பட்டிருக்குமாயின் காங்கிரஸ் தலைமையினர் ஆட்சேபித்திருக்க மாட்டார்கள். காங்கிரஸ் விதிகளும் அதற்கு இடந்தருகிறது. ஆனால், கிருபாளினி தேர்தல் முனையிலும் காங்கிரசை எதிர்ப்பதற்கு திட்டம் வகுத்தார். மற்றும், காங்கிரஸ் கலைக்கப்பட வேண்டுமென்றும் கிருபாளினி கருதுகிறார். காங்கிரசிலுள்ள தனிப்பட்ட நபர்கள் சிலரிடமோ, அல்லது பலரிடமோ அவர் குறைகாணலாம். ஆனால், அதற்காக காங்கிரசையே கலைத்துவிட வேண்டுமென்பது விஷப்பரீட்சையாகும். காங்கிரஸ் கலைக்கப்படுமானால், அது வகித்துவரும் பொறுப்பை ஏற்பதற்கு இன்னொரு தகுதியுள்ள கட்சி நாட்டில் வளர்ச்சிபெறவில்லை. அது மட்டுமல்ல - காங்கிரசுக்கு எதிராக கட்சிகளமைக்க உரிமை தரப்பட்டிருக்கிறது. ஆகவே, காங்கிரசை கலைத்துத் தீரவேண்டுமென்ற கட்டாயமில்லை; காரணமுமில்லை.

பலாத்காரவாதிகளும் திராவிட இயக்கம் போன்ற தேசத்துரோக - தேசீய விரோத கூட்டத்தினரும் காங்கிரசுக்கு எதிர்க் கட்சி நடத்துவதைவிட கிருபாளினி போன்ற தேசபக்தர்கள் - கடைந்தெடுத்த தேசீயவாதிகள் தனிக்கட்சி நடத்துவார்களாயின், அது வரவேற்கத் தக்கதே. ஆனால், தேர்தல் நடக்கவிருக்கும் இந்த நேரத்தில் புதுக்கட்சி அமைத்தால் அக்கட்சியில் பதவிப் பித்தரும் சந்தர்ப்ப வாதிகளுமே இடம் பெறுவர். ஆகவே, தேர்தல் நேரத்தில் காங்கிரசுடன் பூர்ணமாக ஒத்துழைத்து, தேர்தலுக்குப் பிறகு அவசியமேற்பட்டால் தனிக் கட்சி அமைக்கும் வேலையை கிருபாளினி மேற்கொண்டிருக்கலாம். ஆனால், இதற்கு நேர்மாறாக தேர்தலுக்கு முன்பு - தேர்தலை முன்னிட்டே தனிக்கட்சி அமைக்க கிருபாளினி முயன்று வருகிறார். கருத்து வேற்றுமையை மறைத்துக் கொண்டு காங்கிரசிலிருப்பதைவிட அதைவிட்டு வெளியேறியது வரவேற்கத் தக்கதாகும். ஆனால், பலாத்கார - தேசத்துரோக கட்சிகளைப் புறங்கண்டு கிருபாளினியின் கட்சி காங்கிரசுக்கு அடுத்த கட்சியாக விளங்கமுடியுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழ் ஆட்சி

நாமக்கல் ரா. பாலசுப்பிரமணியம்

1. தமிழ்நாட்டில் தமிழ்ப்பண்பின் ஆட்சி வேண்டும்
தரணி முற்றும் அறம்வளர்த்த தறுகண் ணேனும்
அமைதிகொண்ட அச்சமற்ற வாழ்வை நாட்டி
அன்புவழி அகிலத்தை ஆளவேண்டும்.

2. முன்னாளில் தமிழ்மக்கள் எட்டுத் திக்கும்
முடிமன்னர் புகழ்ந்தேத்த வாழ்ந்தாரென்று
இந்நாளில் வெறும்பேச்சால் இசைப்பதன்றி
என்ன செய்தோம் தமிழ்வாழ்வின் ஏற்றங் காண?

3. இனவெறியைப் பூண்டோடு இகழ வேண்டும்
இன்பமிகும் தமிழ் நெறியைப் புகழவேண்டும்
சினமிகுந்து மேடைகளில் சீறிப்பேசி
செய்கையற்றுக் கிடப்பதனை சிந்தை செய்வோம்.

4. தமிழ்வளர வேண்டுமென்று தருக்கிப் பேசும்
தண்மையற்ற வெம்மொழிகள் தமிழைத் தீய்க்கும்
அமிழ்தமெனும் தமிழ்மொழிக்கு அன்பே ஜீவன்
அதைப் பிரிந்தால் அதுபின்னர் தமிழாகாது.

5. ஆட்சியெல்லாம் தமிழாட்சி ஆகவேண்டும்
ஆற்றலெல்லாம் அன்பாற்றல் ஆகவேண்டும்
விழ்ச்சியுற்றோம் என்று சொன்னால் வேறொன்றல்ல
வெறிமிகுந்த ஆசைகளே வீழ்ச்சி காட்டும்.

6. ஆண்டுபல ஆயிரங்கள் முன்னம் முன்னோர்
அலைகடலைக் கடந்துபல அயல்நாடுற்று
வேண்டுபல பொருள்களுடன் அறிவும்தேடி
வெவ்வேறு நாட்டவரும் விரும்ப வாழ்ந்தார்.

7. பல நாட்டு மொழிகளுக்கும் பரிவுகாட்டி
பலமொழியின் நல்லறிவும் படைத்த தாக
நிலைநாட்டும் மெய்யுணர்வே நிறைந்ததாகும்
நீதிமிக்கத் தமிழறிவை நிறுவித்தந்தார்.

8. அடுத்திருந்து அன்பின்வழி அரசைவென்ற
அண்ணலந்த காந்திமகான் வாழ்க்கை முற்றும்
வடித்தெடுத்த நல்லறிவை உலகுக் கீந்த
வள்ளுவனும் தமிழ்முனிவன் வாழ்ந்த வாழ்வே.

9. அத்தகைய நமது முன்னோர் அறிவைப் போற்றி
அன்புநிறை குறையாத ஆற்றல் சேர்ந்து
எத்தகைய தீமையையும் எதிர்த்து நின்று
எந்தமிழ்த்தாய் அரியணையில் இருக்கச் செய்வோம்.

10 வாழியநம் தமிழ்மொழியின வளமை வாழ்க !
வாழியநம் தமிழநாட்டார் வண்மை வாழக !
ஊழிதொறும் புதுமைபெறும் உண்மை அன்பு
உலகெங்கும் நிலவிமக்கள் உய்யவேண்டும்.

இலங்கைத் தமிழர்கள்!

"தமிழன்"

இலங்கைத் தீவின் வடக்குப் பகுதியாகிய யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா நடைபெற்றதல்லவா? இதன் விளைவாக, உலகெங்குமுள்ள தமிழர்களின் கவனத்தை இலங்கைத் தீவு தன்பால் இழுத்துக்கொண்டு விட்டது.

எந்த நாட்டில் - எந்த இனத்தவரோடு இணைந்து வாழ்ந்தாலும் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றில் தமிழன் தமிழனாகவே இருப்பான் என்பதை இலங்கைத் தமிழர்கள் புலப்படுத்திவிட்டனர்.

தமிழகம் - இலங்கைத் தொடர்பு

நில அமைப்புப்படி இலங்கைத் தீவு நம் தமிழகத்திலிருந்து கடலால் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவு எப்போது ஏற்பட்டது என்பதைத் திட்டவட்டமாக சொல்வதற்கில்லை. என்றாலும், ஏதோ ஒரு காலத்தில் இலங்கை, தமிழகத்தோடு நிலத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை உணரமுடிந்தது. இப்போதும் கூட இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே உள்ள கடல் அதிக ஆழமாகவோ அல்லது அகலமாகவோ இல்லை. விமானத்தில் சென்றால் ஒன்றரை நிமிஷத்தில் கடந்துவிடக்கூடிய அளவுக்கு கடல் சிறியதாகத்தான் இருக்கிறது.

இலங்கைத் தீவின் வடக்கு, வடகிழக்கு மாகாணங்களில் மிகப் பெரும்பாலும் தமிழரே நிறைந்துள்ளனர். மத்திய இலங்கையிலும் தென்னிலங்கையிலும் தான் சிங்களவர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். என்றாலும், இலங்கைத் தீவின் ஜனத்தொகையில் சிங்களவர்களே அதிகமாக உள்ளனர்.

1946-ம் ஆண்டுக் கணக்குப்படி இலங்கைத் தீவின் மொத்த ஜனத்தொகை 6484408. இதில் சிங்களவர் 4515198. தமிழ் பேசுவோர் 1470954.

இவர்கள், இந்தியத் தமிழர் என்றும், இலங்கைத் தமிழர் என்றும் இருவிதமாகப் பிரிக்கப்படுகின்றனர். இந்தியத் தமிழரின் எண்ணிக்கை 666004. இலங்கைத் தமிழரின் எண்ணிக்கை 804950. இந்தியத்தமிழர்கள் என்பது பெரும்பாலும் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களையும், மற்றும் வாணிபத்திற்கும், உத்தியோகத்திற்குமாக சமீப காலத்தில் இலங்கைக்கு குடியேறிய தமிழர்களையும் குறிப்பதாகும்.

இவர்களுக்கு இலங்கைத் தீவின் நிரந்தரக் குடிகளுக்குள்ள உரிமைகளில் பெரும்

பாலானவை மறுக்கப்படுகின்றன.

இலங்கைத் தமிழர்கள் என்போர் பெரும்பாலும் வட இலங்கையில் வசிப்பவர்களே யாவர். இவர்கள் வசிக்கும் பகுதி இந்தியத் தமிழகத்தை அடுத்துள்ளதாகும்.

சிங்களவர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் வட இலங்கைத் தமிழர்களுக்கும் உண்டு. யாழ்ப்பாணம் என்ற பகுதியில் தேடிப் பார்த்தாலும் ஒரு சிங்களவர்கூட கிடைப்பது அரிது. யாழ்ப்பாணத்தைச் சுற்றிவரும் ஒரு இந்தியத் தமிழருக்கு இலங்கைத் தீவில் இருப்பதாக நினைப்பே வராது. தாய்த் தமிழகத்தில் இருப்பதாகவே தோன்றும். யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள தமிழர்கள் மிகவும் நாகரீகமடைந்தவர்கள். படித்தவர்களின் தொகை அதிகம். அதிலும் பெண்கள் மிகுதியாகப் படித்திருக்கின்றனர். சமயப்பற்று - குறிப்பாக சைவப்பற்று மிக மிக அதிகம். வைதீகப் போக்குடையவர்கள் என்றுகூடச் சொல்லலாம்.

யாழ்ப்பாணத் தமிழர்கள் இலங்கைக்கு குடியேறியவர்கள் என்று சொல்வதற்கில்லை. இலங்கை, இந்தியாவோடு நிலத் தொடர்பு கொண்டிருந்த காலத்திலிருந்து பின்னர் இயற்கையின் சீற்றத்தால் பிரிந்திருக்கும் இன்று வரை அந்தப் பகுதியிலேயே நிலைத்து வாழ்பவர்கள்தான்.

இந்தியத் தமிழர்கள் என்போர் பெரும்பாலும் இலங்கையின் தெற்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலுமே வாழ்ந்துவருகின்றனர். ஏனெனில் அந்தப் பகுதிகளில்தான் தேயிலைத் தோட்டங்களும், ரப்பர் தோட்டங்களும் இருக்கின்றன.

இந்தியத் தமிழர்களாகிய நாம் 'இலங்கைத் தமிழர்' என்ற சொல்லைக் கேட்ட உடனே ஏதோ ஒரேவித மனப்பான்மையுடன், அல்லது கொடுக்கல் வாங்கல் முதலிய தொடர்புடன் அவர்கள் கூடி வாழ்வதாக நினைத்துக்கொள்வோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த நிலைமை அங்கு இல்லை.

யாழ்ப்பாணத்திலும், அதை அடுத்துள்ள பகுதிகளிலும் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும், தென்னிலங்கைப் பகுதியில் வாழும் இந்தியத் தமிழர்களுக்கும் அதிகமாக தொடர்பு காணப்படவில்லை.

பெண் கொடுத்தல் வாங்கல் முதலிய குடும்ப விஷயங்களிலும்கூட இருதரப்பினரும் தனித் தனியாகத்தான் பிரிந்திருக்கின்றனர். இவர்களிடையே குடும்பத் தொடர்புகள் ஏற்பட்டு உறவு வலுப்படுமாயின் இந்தியத் தமிழர்களை இலங்கை அரசாங்கம் அலட்சியப்படுத்த முடியாது.

இலங்கை இந்தியர் காங்கிரஸ் என்பது இந்தியத் தமிழர்களின் நலன்களுக்கென்றே அமைக்கப்பட்டதாகும். அதுபோலவே, வட இலங்கையில் வாழும் தமிழர்களுக்கென்றே பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அவற்றில் தமிழரசுக் கட்சியும் ஒன்றாகும்.

தமிழரசுக் கட்சி இலங்கையில் தமிழர்கள் பெரும்பாலோ

ராகவும், 'தொடர்ந்தாற்போலும் வசிக்கின்ற பகுதிகளை தனி மாகாணமாகச் செய்யவேண்டுமென்று போராடுகிறது. ஆனால் பாக்கிஸ்தானைப் போன்று 'தமிழர்ஸ்தான்' கோராமல் சிங்களப்பகுதிகளோடு சமஷ்டி சேர விரும்புவதாகவும் அக் கட்சி தெரிவிக்கிறது. இவ்விஷயத்தில் யாழ்ப்பாணத் தமிழர்களிடையே கருத்து வேற்றுமையிருந்து வருகிறது. இப்போதுள்ள அமைப்பிலேயே தமிழர்களின் நலன்களை காத்துக் கொள்ளமுடியும் என்று நம்புகின்றனர் தமிழ் மாகாணப் பிரிவினையை எதிர்ப்போர். சிங்கள இனத்தவரிடமிருந்து பிரிந்து தனி அரசு அமைத்துக்கொண்டாலொழிய, சிங்களவர்கள் தமிழ் இனத்தவர் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள் என்கின்றனர் தமிழரசுக் கட்சியினர். பொதுவாக, இந்தப் பிரிவினையைப் பற்றி தென் இலங்கையிலுள்ள தமிழர்கள் - குறிப்பாக இலங்கை இந்தியர் காங்கிரஸ் அதிகமாக ஆர்வங்காட்டவில்லை. இதற்கு முக்கிய காரணம் அவர்கள் பிரச்னை அலாதியானது என்பதேயாகும்.

இந்தியத் தமிழர்களுக்கு பிரஜா உரிமையே கிடையாது. எந்த நேரத்திலும் இலங்கையிலிருந்து அவர்கள் விரட்டப்படலாம். அதுமட்டுமல்ல; தேயிலை ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சொந்தமாக ஒரு அடி நிலங்கூட அங்கு கிடையாது. தோட்டங்களிலிருந்து விரட்டப்பட்டால் குடியிருக்க வீடின்றி, உழைத்துப் பிழைக்க வழியின்றி அவர்கள் தாய்த் தமிழகம் திரும்ப வேண்டியது தான்.

இந்த நிலையில் அவர்கள் தமிழரசுக் கட்சி கோரிக்கையை ஆதரிக்கவோ எதிர்க்கவோ சக்தியற்றவர்களாகிறார்கள்.

இலங்கை முழுவதையும் சுற்றிப் பார்த்தால், சிங்களவர்கள் மொழி அளவில் தமிழர்களிடமிருந்து வேறுபட்டாலும், தோற்றத்தில் தமிழர்களுக்கும் அவர்களுக்கும் அதிக வேற்றுமையில்லை.

சிங்களவர்கள் பெரும்பாலும் புத்த மதத்தவர்கள். ஆயினும், தமிழகத்தின் வீரபத்தினியாகிய கண்ணகி தேவியையும் அவர்கள் வழிபடுகின்றனர்.

சேரநாட்டுத் தலைநகரான வஞ்சியில் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோவில் கட்டி விழா நடத்தியபோது இலங்கை வேந்தன் கயவாகுவும் வந்திருந்ததாக சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனால் இன்றிருப்பதை விட பண்டை நாளில் இலங்கை சிங்களவர்களுக்கும், இந்தியத் தமிழர்களுக்கும் கலாச்சாரத் தொடர்பு அதிகமாய் இருந்ததாக நம்பமுடிகிறது. அது மட்டுமல்ல; கண்ணகி தேவியின் பிரசித்தி பெற்ற உருவச்சிலை ஒன்று இங்கிலாந்து பொருட்காட்சி சாலையில் இருந்ததல்லவா? அது இப்போது இலங்கைப் பொருட்காட்சி சாலையில்தான் இருக்கிறது. அழகான ஒரு கண்ணாடிப் பீரோவில் அச்சிலையை அருமையாக வைத்துப் பாதுகாத்து வருகின்றனர் இலங்கை அரசினர்.

ஒழுக்கத்தை வளர்க்க வழி என்ன?

வை. இளமுருகன்

இன்று தமிழகத்தில் ஒழுக்கக் கேடான செயல்கள் பெருகி வருகின்றன. இதற்கு முன்பும் இம்மாதிரி சீர்கெட்ட நிலைமை தமிழகத்தில் பல முறைத் தோன்றியதுண்டு. அப்போதெல்லாம் தமிழ்ப் புலவர்கள் அரும்பாடுபட்டு மக்களை தீய நெறிகளிலிருந்து மீட்டு நன்னெறிகளில் செலுத்தினர்.

இப்போதைய சீர்கேட்டிற்கு காரணம் மேனாட்டு வெள்ளையர்கள் நம் தமிழகத்தை அடிமைப் படுத்தி நெடுங்காலம் ஆண்டதே யாகும். இதன் விளைவாக, எளிதில் போக்க முடியாதவாறு மக்களின் அன்றாட வாழ்வில், எல்லாத் துறைகளிலும் இந்த சீர்கேடு பரவியுள்ளது.

இன்று நேர்ந்துள்ள சீர்கேட்டிற்கு முதற் காரணம் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள அடிப்படை மாறுதல் ஆகும். ஆங்கிலேயர் நம்மை அடிமைப்படுத்துவதற்கு முன்பு, எழுத்தாணி கொண்டு பனை ஓலையில் எழுதி நூல்களை இயற்றினார்கள் அறிஞர்கள். தத்தம் கருத்துக்களைக் கற்களிலும் பொறித்துவைத்தார்கள். 'இன்று நாம் பென்சிலிலோ பேனாவிலோ எழுதுவது போன்று பனை ஓலையில் எழுதுவது எளிதானதன்று. மற்றும், ஒரு முறை எழுதினால் ஒரு பிரதி தான் தயாரிக்க முடியும். இன்றைய' அச்சுப் பொறியில் கிடைத்துள்ள' வசதி போன்று ஒரே முயற்சியில் பல பிரதிகளை தயாரிக்கும் வாய்ப்பு அக்காலத்தில் இல்லை. எல்லோரும் எழுதுவதற்கு சக்தியோ அவகாசமோ பெற்றிருக்கவில்லை. இந்த தொல்லைகளால் தமிழகத்தின் கல்விமுறை நாவால் ஓதி மனப்பாடம் செய்வதாக - உள்ளத்திலேயே எழுதிப் படிக்கும் பாடமாக இருந்தது. உரைநடையை மனப்பாடம் செய்வதைவிட, பாட்டுக்களை மனப்பாடம் செய்வது எளிது. அந்த எளிமைக்காகவே பண்டைத் தமிழ் நூல்களனைத்தும் பாட்டுக்களாகவே இயற்றப்பட்டன போலும்! பாட்டுக்கள் கூட படிப்பவருக்கு சுமையாக இராமல் 2 வரிகளிலோ அல்லது 4 வரிகளிலோ எழுதப்பட்டன. மூளை வளர்ச்சி எவ்வளவு அவசியமாயினும், அதைவிட அவசரமானது வயிற்றுச் சோறு. ஆகவே பண்டைத் தமிழகத்தில் உடல் உழைப்பே முதலிடம் பெற்றது. அறிவுக் கல்வி தொழிலோடு இணைக்கப்பட்டிருந்தது. ஏற்றத் தொழிலாளி ஏற்றத்தின் மீது நின்று நீரிறைத்தவண்ணமே பாடினான்; உழவுத் தொழிலாளி நிலத்தை உழுதுகொண்டே பாடினான். இப்படி கல்வியும் தொழிலும் கலந்திருந்த காரணத்தால் சமூகத்தின் அடிதளத்தில் உள்ள பாட்டாளி மக்களிடையே இன்று காணப்படும் ஒழுக்கக் கேடுகள் அன்று இல்லை.

பண்டைத் தமிழகத்தில் எழுதப்பட்ட நூற்களனைத்தும

போற்றற்குரிய நூல்களாக் கருதப்படவில்லை. அந்நூற்களை தேர்ச்சி பெற்ற புலவர்கள் நன்கு ஆராய்வர். நல்ல நூற்கள் அங்கீகரிக்கப் பெற்று மக்களிடையே நடமாடவிடப்படும்; ஏனைய பயனற்ற நூல்கள் அழிந்து ஒழியும். இதற்கென்றே தேர்ச்சி பெற்ற புலவர்களைக்கொண்ட தமிழ்ச் சங்கம் ஒன்றும் மதுரையில் இருந்ததாக அறிகிறோம். இன்று தமிழ் வளர்ச்சிக் கழகம் நல்ல தமிழ் நூற்களுக்கு பரிசளிப்பது போல, அன்றும் தமிழ்ச் சங்கம் நல்ல நூற்களுக்கு புகழ் தேடித் தந்தது. சங்கத்தாரால் ஏற்கப்படாத நூல்கள் மதுரை பொற்றாமரைக் குளத்துள் எறியப்பட்டனவாம். மக்களுடைய வாழ்க்கையில் ஒழுக்கம் நிலவ வேண்டுமென்பதில் அந்நாளைய அறிஞர்கள் கொண்டிருந்த அக்கறைக்கு இது ஓர் அத்தாட்சியாகும்.

பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதிப்படித்ததற்குப் பதிலாக பிற்காலத்தில் மயில் இறகினால் மை கொண்டு எழுதும் வழக்கம் தோன்றியது. இதனால் மிக விரைவில் ஒருவரே பல பிரதிகள் எழுதுவதற்கு வசதி ஏற்பட்டது. ஆகவே அதிக நூல்கள் வெளிவந்தன. இன்னும் பிற்காலத்தில் பனை ஓலைக்குப் பதில் காகிதமும் எழுத்தாணிக்குப் பதில் அச்சுயந்திரமும் தோன்றியதால் புத்தகங்கள் புற்றீசல் போல் புறப்படலாயின. இந்நிலையில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மறைந்து கல்விச் சாலைகள் எல்லாம் பெரிய பெரிய கட்டிடங்களாக காட்சியளித்தன.

விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகக் கிடைக்கப்பெற்ற அச்சுயந்திரத்தால் ஒருவருடைய எண்ணத்தை மிக எளிதாகவும் விரைவாகவும் அதிக மக்களிடையே பரப்புவதற்கு வசதி கிடைத்தது. ஆகவே வெளியிடப்படும் நூற்கள் நல்லவையானால் அவற்றால் அதிகம் பேர்கள் நன்மையடைவர். தீயவையானால் அதிகம் பேர்கள் கெட்டுப் போவர். மெய், வாய், கண், மூக்கு, செவி என உடலோடு இணைந்த ஐந்து உருப்புக்களும் தமிழில் “ஐம்பொறி” என வழங்கப்படும். அது போன்றே நவீன யந்திரத்தையும் பொறி என்றே அழைப்பர். ஒருவன் தனக்கும் உலகத்துக்கும் நன்மை தேடும் வழியில் வாழவேண்டுமானால் ஐம்பொறிகளையும் நல்ல செயல்களிலேயே ஈடுபடுத்த வேண்டும் அவ்வண்ணமே நவீன பொறிகளை (யந்திரங்களை)யும் நாம் பயன்படுத்த வேண்டும்.

நன்னெறியை வளர்த்து மக்களுக்கு நலம் தரும் நூல்களையே அன்றி ஏனைய நூற்களை வெளியிடுவதற்கு அச்சுயந்திரத்தை பயன்படுத்தக் கூடாது.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (குறள்)

என்பதன்றோ வள்ளுவர்வாக்கு.

அச்சுப் பொறியை பயன்படுத்தும் உரிமை ஆட்சியாளரிடமே யிருத்தல் வேண்டும். ஆட்சியாளர் என்று நாம் கூறும்போது மக்கள் கருத்து வழி மக்களுக்காக மக்களால்

ஆளப்படும் அறவழிப்பட்ட ஆட்சியையே குறிப்பிடுகிறோம். 'ஜனநாயகம் என்ற' பெயரால் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் பணநாயக ஆட்சியை அல்ல. பணநாயக ஆட்சியிடம் யந்திரங்கள் சிக்கினால் உலகம் என்ன கதி அடையும் என்பதை இன்று அணுகுண்டு துப்பாக்கி, பீரங்கி முதலிய கொடிய ஆயுதங்களை அரசாங்கங்கள் பயன்படுத்தும் முறையிலிருந்து அறிந்திருக்கிறோமல்லவா.

அச்சுப்பொறியை தனிப்பட்டவர்கள் பயன்படுத்தவிடும்போது அவை பெரும்பாலும் பொருள் சேர்க்கும் வியாபாரக் குறிக்கோளுடனேயேதான் பயன்படுத்தப்படுகிறது. அச்சுப்பொறியின் மூலம் வெளிவரும் நூற்களும், பத்திரிகைகளும் மக்களின் ஒழுக்கத்தை உயர்த்துவனவாக இருக்கவேண்டுமென்ற அக்கறை தனிப்பட்ட பணக்காரர்களுக்கு இருக்க முடியாது.

"வேதத்தை எட்டில் எழுதுவது கூடாது. அப்படி எழுதினால் அதன் சிறப்பு போய்விடும்." என்று முற்கால மக்கள் நம்பினர். அவர்கள் நம்பிக்கையிலும் ஓர் உண்மை இருக்கிறது. ஏட்டில் எழுதிவைப்பின் ஒவ்வொருவரும் தாமே பார்த்துக் கொள்ளவும் தங்கள் தங்கள் மனப் போக்குக்கு ஏற்றவண்ணம் வேத பாடல்களுக்கு உரை செய்துகொள்ளவும் வசதி ஏற்பட்டுவிடுகிறது. இதனால் எழுத்துப் பிரதிகளில் இடைச் செறுகல்கள் நுழையலாம். வேண்டுமென்றே கருத்துவழி மூலப் பாடத்தை திருத்திவிடலாம். ஒருவரிடம் ஒருவன் கேட்டுப் படித்து - நெட்டுருவுச்செய்து - ஓர் குறிப்பிட்ட சந்த ஒலியுடன் பயன்படுத்தினால் இந்த பிழைகளெல்லாம் ஏற்படா.

ஒருவன் மட்டரகமான ஒரு கருத்தை இன்னொருவன் முன் நின்று தெரிவிக்க அஞ்சுவான். அஞ்சாமல் தெரிவித்தாலும் அவனது கருத்திலுள்ள தவறை எடுத்துக்காட்டி இடித்துரைக்க முடியும். ஆனால் இப்போதோ ஒருவன் தனது கேவலமான எண்ணங்களை புனைப் பெயரில் எழுதி மக்களிடையே எழுதிப் பரப்பிவிட்டு தான் மறைந்து கொள்ள முடிகிறது. அவனது ஆபாசத்தை எடுத்துக்காட்டி அவனைத் திருத்துவதற்கு நேருக்கு நேர் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இதனால் அச்சுப்பொறியே வேண்டாமென்று சொல்ல முடியுமா. அதுவும் முடியாது. இந்த குறைபாடுகளிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி தனிப்பட்ட பணக்காரர்கள் பயன்படுத்தவிடாமல் அறவழி ஆளும் அரசினரே பயன்படுத்தவேண்டும் என்பதுதான்.

கன்னியர் கற்பும், காளையர் காமமும்

வி. டி. லட்சுமி

பல நாகரிகங்கள் கலந்த தோர் புயலில் சிக்கித் திக்கு முக்காடுகின்றது இன்றைய உலகம். ஆத்மீக வளர்ச்சியின்றி, செல்வமே பெரிதென மதிக்கப்படும் எந்தச் சமூகத்திலும் ஊழல்கள் மலிந்து கிடக்கத்தான் செய்யும். உலகில் நிலவும் இம் மாயாசக்திகள் இந்தியாவையும் விடவில்லை. இந்திய சமூகத்தின் ஒழுக்க முன்னேற்றத்திற்கும், சமூகப் புணருத்தாரணத்துக்கும் தடையாக இருக்கும் பல கவலைதரும் பிரச்னைகளில் கல்யாணமாகுமுன் கருக்கொண்ட தாய்மார்களின் பரிதாபமான பிரச்னை முக்கியமான தொன்றாகும்; இவர்களின் எண்ணிக்கை யுத்தகாலத்திலும், அதற்குப் பிறகும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆண்மக்களில் பலர் படையில் சேர்ந்து போர் முனைக்குச் சென்று மடிகின்றனர்; மற்றும் பலர் வீடுவாசல்களை விட்டு வெகுகாலம் தூரப் பிரதேசங்களில் தங்கிவிடுகின்றனர்; இதனால் ஆண்களைப் பிரிந்த பெண்கள் அதிகமாக இருக்கும் நிலைமை சமூகத்தில் ஏற்பட்டுவிடுகிறது; சிலசமயம் இப்படிப்பட்ட பெண்களில் சிலர் யாதொரு பாதுகாப்பும், கட்டுத் திட்டமும் இல்லாதபடியும், வீடு வாசல் இல்லாதபடியும், விவாகமாகாதபடியும் இருக்கிறார்கள். இப்பேர்பட்ட பெண்கள் வசிக்கும் இடங்களில் யுத்தகாலத்தில் முகாம் போட்ட அந்நியநாட்டுப் படை வீரர்கள், ஆதரவற்ற இந்த அபலைகளை எளிதில் மயக்கி, தங்கள் வலையில் சிக்கவைத்து, பொய் புரட்டுகளைச் சொல்லி ஏமாற்றி, கடைசியில் கர்ப்பமும் தரிக்கவைத்து, விவாகம் செய்துகொள்ளாமல் விட்டு விட்டுப் போய்விடுகிறார்கள்; இந்த துர்ப்பாக்கியவதிகளில் சிலர் "யாருக்கும் வேண்டாத" பிள்ளைகளை பெற்று நிர்க்கதியான நிலையில் தவிக்கிறார்கள்.

பிரச்னையைத் தீர்க்கும் விதம்

சரி! விவாகத்துக்கு முன்னரே இப்படிக் குழந்தைகளைப் பெற்றுவிட்ட இந்தத் "தாய்மார்கள்" யார்? ஏன் இவர்கள் இப்படி ஆனார்கள்? இவர்கள் இந்தக் கதிக்கு வாராமல் தடுத்திருக்கமுடியுமா? இவர்களின் கதிமோட்சத்திற்கு உடனடியான வழி யாது? எதிர்காலத்தில் இளம் மங்கையர்களும், பெண்களும் இம்மாதிரி "விவாகமாகாத தாய்மார்களாக" ஆகாமல் தடுப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்? இவ்விதம் அல்லலுறும் பெண்களின் நலத்தில் உண்மையான அக்கரை உள்ள சமூக ஊழியர்கள் இக்கேள்விகளைப்பற்றி ஆர அமரச் சிந்திக்கவேண்டும்; கஷ்டத்தைக் களைய தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்; கலங்கி நிற்கும் "கன்னித் தாய்கள்" க்ஷேமத்துக்கான காரி

யங்களைச் செய்ய வேண்டும்; இப்படிச் செய்தால் இப் பிரச்னையைத் தீர்த்துவிடலாம்.

ஒழுக்கந் தவறுவதற்குக் காரணம்

இப்படி "விவாக மாகாது பிள்ளை பெற்றவர்கள்" யார்? இவர்கள் ஏன் இக்கதிக்கு ஆளானார்கள்? எந்தப் பெண்ணோ, இள நங்கையோ "கல்யாணமாவதற்கு முன் பிள்ளைப் பெற்றவள்" என்ற பட்டம் சூட்டிக் கொள்ளவே விதிவசத்தால் பிறந்துவிட்டாள் என்று பகுத்தறிவு படைத்த எவரும் சொல்லமாட்டார்கள். தடுத்துக் கொள்ளக்கூடியதோ அல்லது கூடாததோ ஆன சந்தர்ப்பங்களுக்கு இரையானவர்களே இப் பெண்கள்! பல குடும்பங்களில் வாலிபர்களால் வசீகரப்படுத்தப் படக்கூடிய பருவமடைந்த பெண்கள்மீது சரியான கட்டுப்பாடோ கண்காணிப்போ இருப்பதில்லை. இப் பெண்களுக்குத் தன்னடக்கம், இச்சை அடக்குதல், மனோசக்தி ஆகியவற்றின் அவசியம்பற்றிய போதனைகளும் கிடையா. அது தவிர பணக் கஷ்டத்தின் காரணமாக காலா காலத்தில் இப் பெண்களுக்கேற்ற இளைஞர்களைத் தேடி மணம் செய்து வைக்கவும் பெற்றோர்களுக்கு முடியாமற் போய்விடுகிறது. இதுபோன்ற காரணங்களால் இப் பெண்கள் கல்யாணமாகாது தனியாகவே இருக்க நேரிடுகிறது; ஆனால் அவர்களின் இளம் வயதுக்கு இயற்கையான இச்சை எழுந்தெழுந்து திருப்தியுருவண்ணம் போய்விடுகிறது. மேலும் இப் பெண்களில் சிலர் படிப்புக்காக வெகுதூரமான ஊர்களுக்குச் செல்லுகிறார்கள்; அங்கு அவர்களை அடக்குவதற்கு யாருமில்லை; பெண் சுதந்திரம் என்ற பெயரால் ஆண்களோடு நெருங்கிப் பழக முற்படுகிறார்கள்; மனோதிடக் குறைவினால் காம இச்சையை அடக்கமுடியாது ஒழுக்கந் தவறி விடுகிறார்கள்.

சில பெண்களை யாரும் மணக்க விரும்புவதில்லை; இப்பேர்ப்பட்ட பெண்களை மனச்சாட்சியற்ற சிலர் தங்கள் காம இச்சையைப் பூர்த்திசெய்து கொள்ளப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இன்னும் சில ஏழைக் குடும்பங்களில் வசதியில்லாத காரணங்களினால் பெண்கள் படிப்பின்றி ஆசைக் காட்டுபவர்களின் வலைகளில் எளிதில் சிக்கிவிடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட பெண்களை யாதொரு வருமானமோ, பொருளாதார வசதியோ இல்லாத பொறுப்பற்ற ஆண்கள் ஏமாற்றி தங்கள் காமத்தை தீர்த்துக்கொள்ளுகிறார்கள்; பிறகு குடும்பம் நடத்த சக்தியற்றவர்களாக இப் பெண்களை தவிக்கவிட்டு ஓடிவிடுகிறார்கள். கடைசியாக கன்னி கழியாத பல இளம் விதவைகள் இருக்கிறார்கள். இவர்கள் பார்க்கப்போனால் கல்யாணமாகாதவர்களுக்குச் சமமென்றே கூறவேண்டும்; இவர்கள் ஒழுக்கந்தவறுதிருத்தல் சிரமந்தான்; சிலர் வழுக்கி விழுந்துவிடுகிறார்கள். இப்படித் தவறான வழிகளில் போன சில பெண்களும், இள நங்கையரும் பழிக்கு ஆளாகாது தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால்

துரதிர்ஷ்டசாலிகளான பலர் பிள்ளைகளைப் பெற்று அப்பிள்ளைகளுக்குச் சட்டப்படியான தந்தை எவரெனக் கூறமுடியாத நிலையிலே நின்று சமூகத்தின் பழிச் சொல்லுக்கும் இழி நிலைக்கும் ஆளாகி நிற்கிறார்கள்.

ஆண்களே பொறுப்பாளர்கள்!

இப்படிச் சந்தர்ப்பக் கோளாறால் திருமணமாவதற்கு முன்னரே கர்ப்பம் தரித்து குழந்தை பெற்று நிற்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஈடாக வெளிக்குத்தெரியாத "தகப்பன்மார்களும்" ஒளிமறைவாக இருக்கத்தான் வேண்டும். இப்படி விவாகமாகாத "தாய்மார்கள்" பெருகுவதற்கும், யாரும் வேண்டாத ஒழுக்கத்தவறால் பிறந்த குழந்தைகள் பிறப்பதற்கும் பொறுப்பாளிகள் இந்த வெளிக்குத் தெரியாத "தகப்பன்மார்கள்" தானே! ஆனால் அவர்கள் தங்கள் பொறுப்பை ஏற்கும்படிச் செய்யப்படுகிறார்களா? அபாவத்துக்கு ஆளான அந்த அபலைகளை மணம்புரிந்து கொள்ளும்படி அவர்கள் கட்டாயப் படுத்தப்படுகிறார்களா? அல்லது தங்களுக்குப் பிறந்த அந்தக் குழந்தைகளின் பராமரிப்புக் கடமையாவது மேற்கொள்ளும்படிச் செய்யப்படுகின்றனரா? இல்லையே! அது போகட்டும். தாங்கள் செய்த தவறை உணர்ந்து பச்சாத்தாபமாவது படுகிறார்களா? இல்லையே! தலை நிமிர்ந்து நடந்து திரியும் இந்த ஆண் சமூகமாவது பரிகசித்து நிந்திக்கிறதா? இல்லை; இல்லவே இல்லை! இதற்குக் காரணம் மனித சமூகத்தில் ஒரு தலைப்பட்ட நீதி முறை இருந்துவருவதுதான். ஒழுக்க சம்பந்தமான சட்ட திட்டங்கள் ஆண்களால் வகுக்கப்பட்டன; எனவே அவை ஆண்பாலருக்குச் சாதகமாகவே இருக்கின்றன. பல நூற்றாண்டுகளாகவே சமூகம் ஆண்களால் ஆக்கப்பட்ட சட்டங்களின் பிரகாரம் இயங்கி வருகிறது; ஆகையால் ஆண்கள் புரியும் கொடுமைகளைக் கவனிப்பாரில்லை. ஆண்கள் எல்லை மீறி நடந்தால் கேட்பார் கிடையாது. இது விந்தையிலும் விந்தை! இதே சமூகம், ஆண்களால் ஏமாற்றப்பட்டு மணமாகாமலே மக்களைப் பெற்ற பெண்களை மட்டும் கண்டிக்கிறது; இவர்களை சந்தியிலும், பந்தியிலும் பலப்பல விதமாக இழிவுபடுத்துகிறது.

சமூகச் சீர்கேடு

மணமாகாததற்கு முன்னரே பிள்ளை பெற்ற பெண்களை சமூகம் வெறுத்து ஒதுக்கிவிடுகிறது. மாதர்களுக்கு இயற்கையான தாய்மையை, சமூக விதிக்கு புறம்பாக அவர்கள் கல்யாணமாவதற்கு முன்னரே அடைந்துவிட்டனர் என்பது உண்மைதான். விவாகம் என்பது உயர்ந்ததோர் முறை என்பதும் உண்மையே. பலதரப்பட்டவர்களை ஒரு குடும்பத்தில் பிணைத்து ஒற்றுமையாக வாழும்படிச் செய்யவும், சமூகத்தில் ஒழுக்கம் நிலவும்படிப் பார்த்துக் கொள்ளவும் விவாக விதி கௌரவிக்கப்பட வேண்டும். ஆனால் பல சமூக - பொருளாதார காரணங்களினாலும், அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒழுக்க முறையை மீறி ஒரு சில இளம்

பெண்கள் ஒழுக்கந்தவறி மனைவியராவதற்கு முன்னரே தாய்மார்களாகிவிட்டால் அதற்காக அவர்களைத் தூற்றுவதும், அடியோடு கண்டிப்பதும் சரிதானா? அந்த அபலைப் பெண்களை அவர்களின் குடும்பத்தார் நிராகரிக்கவாவேண்டும்? இந்தப் பரிதாப நிலைமையை அடைவதற்கு ஒருவிதத்தில் மறைமுகமான காரணமாக இருந்த இதே சமூகம் இவர்களை ஒதுக்கித் தள்ளவேண்டுமா? இப்படிச் செய்வதனால் இவர்களின் குடும்பங்களும், சமூகமும் யாதொரு பாவமுமறியாத இவர்களின் குழந்தைகளையும் "முறை தவறுகப் பிறந்த குழந்தைகள்" என்றும் பழிசாற்றி அநியாயமாகத் தண்டனைக்குள்ளாக்குகிறார்கள் என்பதை உணருகிறார்களா? இப்படி கல்யாணமாவதற்கு முன்னரே கர்ப்பந் தரித்து உற்றார் உறவினரால் வெறுக்கப்பட்டு வீட்டைவிட்டு விரட்டப்பட்ட பெண்கள் மேலும் அபவாதம் ஏற்படுமே எனப் பயந்து கருவை அழிக்க முயற்சி செய்வதும், அது கூடாதுபோனால் சிசுஹத்தி செய்யவும் துணிந்துவிடுகிறார்கள் என்று இச் சந்தர்ப்பத்தில் கூறுவது அவசியம். மிகவும் ரோஷமுள்ள சில பெண்கள் தாங்கள் கர்ப்பந்தரித்துவிட்டோம் என்று தெரிந்தவுடனேயே தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள்; அல்லது தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்கிறார்கள். இது மாதிரி சம்பவங்களுக்குப் பொறுப்பு யார் என்று கேட்கலாம். **சந்தேகமென்ன? சமூகமே!** சமூகம் இப்படித் தங்கள் ஆத்திரத்தையும், க்ஷாத்திரத்தையும் கல்யாணமாகாது பிள்ளை பெற்ற பெண்கள்மீது காட்டாது, அவர்களை ஒதுக்கி வைக்காமலும் இருந்து, இப்படிப்பட்ட அபாக்கியவதிகளின் குடும்பத்தாரும் இவர்களை இகழ்ந்து விரட்டாது அனுதாபத்துடன் ஆதரவளித்து, பாதுகாத்து, புத்திமதி கூறி கைதூக்கிவிட முற்படுவார்களேயானால், தெரியாத்தனத்தினால் தவறி விழுந்த பல பெண்கள் சீர்திருந்தி பிற்காலத்தில் நல்ல மனைவிமார்களாகவும் தாய்மார்களாகவும் வாழ்க்கை நடத்துவதை நாம் காணலாம்.

தடுப்பு முறை

விவாகமாகு முன்னரே பெண்கள் பிள்ளை பெற்றுவிடும் துர்பாக்கிய சம்பவங்கள் நிகழாதபடியே பார்த்துக்கொள்ளக்கூடாதா? என்று சிலர் கேட்கலாம். சாதாரண நிலைமையில் இது சாத்தியம்தான்; பெண்களின் பெற்றோர்கள் புத்திசாலித்தனமாக இருந்து, தங்கள் புத்திரிகளைச் சரிவரப் பாதுகாத்துப் பராமரித்து வந்தால் ஒழுக்கக்கேடுகள் நிகழமாட்டா. அதோடு பெண்களும் நன்கு கல்வி அளிக்கப்பட்டு தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் நிலைமையிலும் இருக்கவேண்டும்; அன்றியும் அவர்களுக்குக் காலாகாலத்துக்கு தகுந்த புருஷர்கள் கிடைத்து விவாகமும் ஆகிவிடவேண்டும்; அப்படிக்கில்லாது விவாகம் செய்துக்கொள்ளக் கூடாத தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் ஆண்களின் ஆசை வலையில் சிக்கி காம இச்சைக்காளாகிவிடாமல்

தங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இப்படி எல்லாம் இருப்பதற்குச் சந்தர்ப்பங்களும் ஒத்து வரவேண்டும்; ஆண்களும் அவர்களை அண்டா திருக்கவேண்டும்.

அபலைகளுக்கு ஆதரவளித்தல்

நாம் சங்கோசப்பட்டவர்களாக இருக்க முயற்சிப்பதில் பிரயோஜனமில்லை; நம் சமூகத்தில் விவாகமாகாமல் குழந்தை பெற்ற பெண்கள் இருக்கிறார்களென்ற விஷயத்தை நாம் மறைத்துவைக்கும்படியும் யாரும் சொல்லவில்லை. உண்மை நிலையை நாம் உள்ளபடி உணரவேண்டும்; அருவருக்கப்பட்டு, அலட்சியம் செய்யப்பட்டு, அல்லலுற்றுத் தவிக்கும் இந்த அபலைகளுக்கு உடனே உதவி செய்ய முன்வரவேண்டும். அவர்களது அருங் குழந்தைகள் பாதுகாக்கப்படவேண்டும். உலகப் பெரியார்களில் சிலரும், மாதர் மாணிக்கங்களில் சிலரும் இப்படி அருவருக்கப்பட்டு ஒதுக்கித் தள்ளப்பட்ட "வேண்டாக் குழந்தைகள்" இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

சமூக ஊழியரின் கடமை

கல்யாணமாவதற்கு முன்னரே பிள்ளை பெற்ற பெண்களை அவர்களின் குடும்பங்களில் மறுபடியும் சேர்த்துவைக்கச் சமூகச் சேவையாளர்கள் முயற்சி செய்யவேண்டும்; அல்லது அவர்களை அவர்களின் பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களில் சேர்க்கவேண்டும். கூடுமானால் இப் பெண்களை மணந்து கொள்ளக்கூடியவர்களைக் கண்டுபிடித்து மணமும் செய்து வைக்கவேண்டும். கல்யாணம் செய்து வைத்துவிடுவதுதான் சிறந்த வழி. நான் சம்பந்தப்பட்டுள்ள "ஸ்திரீ சாதன"த்தில் இதுபோன்ற "விவாகமாகாத தாய்மார்கள்" 21 பேர்களுக்கு விவாகம் நடத்தி வைத்திருக்கிறோம்; நூற்றுக்கணக்கான பெண்களை மறுபடியும் அவர்களின் குடும்பத்தார்களே ஏற்றுக்கொள்ளும்படிச் செய்துள்ளோம். அடுத்தபடியாக இம்மாதிரியான பெண்களுக்குக் கல்வி புகட்டி, உபாத்தியாயினிகளாகவோ, மருத்துவச்சிகளாகவோ, நர்சுகளாகவோ, ஹாஸ்டல் மேட்ரன்களாகவோ பயிற்சி கொடுத்து அத் தொழில்களில் ஈடுபட்டுப் பொருளாதாரச் சுதந்திரமுடையவர்களாக இவ் விவாகமாகாத தாய்மார்கள் இருக்கும்படிச் செய்ய வேண்டும். "ஸ்திரீ சாதனத்"தில் பயிற்சி பெற்றவர்கள் 17 பேர் இதுமாதிரி பயிற்சி அடைந்து உத்தியோகம் பார்க்கிறார்கள். இவர்களின் குழந்தைகள் அனாதைக் குழந்தைகள் நிலையங்களிலாவது வைத்துப் பராமரிக்கப்பட வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன; மேலும் சமூக ஊழியர்கள் இம்முறைகளை வெற்றிகரமாகக் கையாளலாம்.

சமூகத்தில் இப்பொழுது சீர்திருத்த மனப்பான்மை பரவியுள்ளது. ஆகையினால் தற்சமயம் உள்ள கல்யாணமாகாது பிள்ளையை பெற்ற பெண்களுக்கும், அவர்களது குழந்தைகளுக்கு மட்டும் நிவாரண

மளிப்பதுடன் நின்றுவிடக் கூடாது; இளம் பெண்கள் இம்மாதிரி 'விவாகமாகாத தாய் மார்'களாக ஆவதற்கான சமூக பொருளாதார, ஒழுக்க ரீதி அடிப்படையான காரணங்களைப் பற்றி நன்கு ஆராயவேண்டும். யுவர்கள் பெண்களின் கற்பைக் காப்பாற்றிப் போற்றுபவர்களாக இருக்கும்படிச் செய்யவேண்டும். ஆண்களின் காம இச்சையைப் பூர்த்திசெய்வதற்கே பெண்கள் இருக்கிறார்கள் என்ற பழைய கொள்கை அடியோடு மாறவேண்டும். புருஷன், மனைவி என்ற பந்துத்துவத்தின் உண்மைத் தத்துவமும் நோக்கமும் யாது என்பதையும், தங்கள் இந்திரிய சக்தியை எப்படி முறையாக மட்டும் பயன்படுத்தவேண்டும் என்பது பற்றியும், அப்படிச் செய்யாமல் ரகசியமாகக் கையாளப்படும் இயற்கைக்கு மாறான முறைகளால் விளையும் மாபெரும் கேடுகளைப் பற்றியும் இளம் பெண்களுக்கும், வாலிபர்களுக்கும் நன்கு புகட்ட வேண்டும். இம்மாதிரி நடவடிக்கைகள் எல்லாம் எடுத்தால்தான் இளம் பெண்கள் கல்யாணமாகு முன்னரே பிள்ளையைப் பெற்றுவிடும் அபவாதத்துக்கு ஆளாகாமல் தடுக்கப்படுவார்கள். விவாகமாகாத ஸ்திரீகள் சிற்றின்பத்தில் ஈடுபட்டாலுங் கூட கர்ப்பந் தரிக்காதபடியிருக்க தற்சமயம் உள்ள நவீன கர்ப்பத்தடை முறைகளைக் கையாளலாம் என்று கருதும் சமூக சேவையாளர்கள் சிலர் இந்தியாவிலும் இருக்கின்றனர்.

இக் கருத்து இன்னும் சர்ச்சை செய்யப்படும் நிலையிலே இருக்கிறது. இதற்கு எதிர்ப்பும் அதிகம். அன்றியும், இது மிகவும் முற்போக்கானது; இந்தக் காலத்துக்கு ஒவ்வாதது. ஆகையினால் பழமையில் நம்பிக்கை கொண்ட நம் நாட்டு மக்கள் இதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். வருங்காலத்து நம் மங்கையர் இந்த இழிநிலையில் வீழாதபடி காப்பாற்ற நாம் முயற்சிப்போமாக! இப் பிரச்னையே இல்லாத சமூகத்தை நிர்மாணிப்போமாக!

— 'சென்னைச் செய்தி'

★

இதுதானா இலங்கை?

சு. நடேச பிள்ளை, பி. ஏ. பி. எல்.,
(யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரித் தலைவர்.)

இந்தியாவினின்று இலங்கைக்கு முதன்முறையாக வருபவர்களில் அநேகர், "இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இதுதானா?" என்று கேட்பதுண்டு. இந்தியாவில் இராமாயணத்தைப்பற்றி அறியாதார் இல்லையென்றே சொல்லலாம். ஆதலின், அங்கிருந்து இலங்கைக்கு வருபவர்கள், பண்டிதராயினும் சரி, பாமரராயினும சரி, இலங்கையுடன் இராமாயணத்தையும் சேர்த்து நினைப்பது இயற்கையாகும். வடமொழியில் வான்மீகி முனிவராலும், தமிழில் கவிச்சக்ரவர்த்தி கம்பராலும் வர்ணிக்கப்பட்ட இலங்கை எது என்பதைப பற்றி, இலங்கைக்கு வருகின்ற அறிஞர்கள் ஆராய விருமபுவார்கள் என்பது திண்ணம்.

இராமாயணம் முழுவதும் கட்டுக்கதை என்ற கொள்கையுடையோரும் இக்காலத்தில் உளர். அவர்கள் இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையை ஒரு கற்பனைநாடாகக் கருதுவர். இராமாயணத்தைப்பற்றி ஜெர்மன் பாஷையில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதிய ஜக்கோபி என்பவர், "சீதை என்றசொல் 'உழவுசால்' எனப் பொருள்படுமாதலின், இராமாயணம உழவுத்தொழிலை உருவகப்படுத்தற்கு எழுந்த காவியம்" என்று கூறினர். வேறு சில ஆராய்ச்சியாளர்கள், வட இந்தியாவிலிருந்த ஆரியர், விந்திய மலைக்குத் தெற்கே பரவிய வரலாற்றை இராமாயணம் விளக்குகிறதென்று கொள்வர்.

இராமாயணத்திற் சொல்லப்பட்ட செய்திகளில் ஓரளவு உண்மையுண்டென்ற கொள்கையுடைய மேனாட்டறிஞர்களில் பார்ஜிட்டர் ஒருவராவார். அவர் இந்தியாவில் பல ஆண்டுகளாக உத்தியோகத்தில் அமர்ந்து, வடமொழி நூல்களிலுள்ள வரலாற்றுப் பகுதிகளைத் துருவி ஆராய்ந்தவர். இராமபிரான் சஞ்சரித்ததாக இராமாயணம் கூறும் இடங்களைப்பற்றி அவர் எழுதிய கட்டுரையில், தென்னிந்தியாவுக்கு அணித்தாயுள்ள இலங்கையே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையாகும் என்றார். இதுவே பல நூற்றாண்டுகளாக இந்தியாவிலுள்ள மக்கள் மனதில் பதிந்த கொள்கையாக இருப்பினும், சில ஆராய்ச்சியாளர்கள் இதைப்பற்றி ஐயம் நிகழ்த்தி வேறு கொள்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வாராய்ச்சியாளர்களில் ஒரு சாரார், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை, இந்தியாவுக்கப்பால் வெகு தூரத்திலுள்ள ஜாவா, சுமாட்ரா பிர

தேசம் என்பர். வேறு சிலர், **சர்தார் கீபே** என்பவரைப் பின்பற்றி, இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் இலங்கை இருந்ததாகக் கருதுவர். இந்த இரண்டு கொள்கைகளும் பொருத்தமற்றவையாகத் தோன்றுகின்றன. சாவகத்தீவு என்று தமிழிலக்கியம் கூறும் ஜாவா முற்காலத்தில் 'யவத்வீபம்' என்று வடமொழியில் வழங்கியது. வான்மீகி முனிவர் கிஷ்கிந்தா காண்டத்தில் யவத்வீபத்தை இலங்கையினின்று வேறுபட்ட பிரதேசமாகவே காட்டியுள்ளார். சுக்ரீவன் கிழக்குத் திசையிலுள்ள நாடுகளைக்கூறும்போது யவத்வீபத்தையும், தெற்குத் திசையிலுள்ள நாடுகளைக்கூறும்போது இலங்கையையும் குறிப்பிடுவதினின்று, இலங்கை யவத்வீபம் ஆகாதென்று வெள்ளிடைமலை போல் விளங்கும். இனி, இலங்கை சமுத்ர மத்தியில் உள்ளதென்று வான்மீகி முனிவர் பன்முறையும் கூறுகின்றார். சமுத்ரமில்லாத இடத்தில் இலங்கை இருந்ததாக சர்தார் கீபே எண்ணுவது வெறும் கற்பிதமாகும்.

இலங்கை என்று இப்பொழுது வழங்கப்படுகின்ற தீவே பல நூற்றாண்டுகளாக இப்பெயருடன் விளங்கி வருகின்றது. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் இந்நாடு இலங்கை என்றே வழங்கப்படுவது தமிழறிஞர் நன்கு தெரிந்ததாகும். அக்காலத்தில் இந்நாட்டை ஆண்ட மன்னனைக் "கடல் சூழிலங்கைக் கயவாகு" என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டினின்று இந்நாட்டின் சரித்திரத்தைத் தொடர்ந்து கூறும் **மஹாவம்சம்** என்ற பழைய இதிகாசத்தில் இந்நாடு ஆதிமுதல் அந்தம் வரையில் இலங்கை என்றே வழங்கப்படுகிறது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவினின்று இலங்கைக்கு வந்த விஜயன் என்ற அரசகுமாரன் அக்காலத்தில் இலங்கையிலிருந்த யக்ஷர்களுக்கு அரசியான **குவேனி**யை மணந்த சரித்திரத்தை மஹாவம்சம் கூறுமிடத்து, இலங்கையின் மலைப் பிரதேசத்தில் யக்ஷர்களின் தலைநகரமாகிய இலங்காபுரி இருந்ததென்று குறிப்பிடுகின்றது. திரிகூடபர்வதம் என்கிற மலையின் உச்சியில் விளங்கிய இலங்காபுரியை இராவணன் தனது தலைநகரமாகக் கொண்டிருந்தான் என்று இராமாயணம் கூறுவது ஈண்டு நினைவுகொள்ளத் தக்கது.

திரிகூடபர்வதத்தைப் பற்றி, கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரபாண்டியனைக் குறிப்பிடும் ஒரு சாசனம் எமது ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாக உள்ளது. இச்சாசனம் சில ஆண்டுகளுக்கு முன் புதுக்கோட்டை சமஸ்தானத்திற் கிடைத்தது. பாண்டியப் பேரரசைத் தென்னிந்தியாவில் நாட்டிய ஜடாவர்மன் சுந்தர பாண்டியனது சகோதரனாகிய வீரபாண்டியன் இலங்கையை வென்றது சரித்திர பிரசித்தமான செய்தியாகும். இச்செய்தியை வீரபாண்டியன் தன் சாசனத்திற் கூறும்போது, தனது வெற்றிக்கு அடையாள

மாக பாண்டிய அரசின் மீன் இலச்சினையை இலங்கையில் திருக்கோண மலையிலும், திரிகூடபர்வதத்திலும பொறித்ததாக விவரிக்கின்றான். இலங்கைக்கு அப்பாலுள்ள புதுக்கோட்டையிற் கிடைத்த இச்சாசனத்தின் ஒரு பகுதி முற்றும் உண்மையான செய்தியாகும் என்பதற்கு இப்பொழுதும் இலங்கையிற் சான்று இருக்கின்றது. திருக்கோணமலையிலுள்ள கோட்டை வாசலில் இன்றும் இரட்டைமீன் இலச்சினை விளங்குவதைக் காணலாம். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் போர்த்துக்கேயர் திருக்கோணமலையிலிருந்த சிவாலயத்தைத் தகர்த்த போதிலும், பாண்டிய இலச்சினைக் கல்வெட்டு அவர்களது கொடிய செயலினின்று தப்பி, இன்றும் சிதைவுபடாமலிருப்பது பெரிய விந்தையே. வீரபாண்டியன் திருக்கோணமலையில் மீன் இலச்சினை பொறித்தது உண்மையாயின், அவன் சாசனத்திற் கூறிய வாறு, திரிகூடபர்வதத்திலும் அவ்விலச்சினையைப் பொறித்திருக்க வேண்டும். அவன் கூறும் திரிகூடபர்வதம் இலங்கையில் எப்பாகத்தில் உள்ளது? இதை யாம் அறிந்தால், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந்நாடுதான் என்று அறுதியிட்டுத் தீர்மானிக்கலாம்.

இந்நாட்டை இராமாயணத்துடன் சம்பந்தப்படுத்தும் பல ஐதிகங்கள் கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்றன. சீதாபிராட்டி சிறையிருந்த 'அசோகவனம்' இந்நாட்டின் உயர்ந்த சிகரங்களில் ஒன்றாகிய **ஹக்கலா** என்ற இடத்தைச் சார்ந்ததென்று அங்குள்ள சாதாரண மக்கள் வாயினின்று இப்பொழுதும் கேட்கலாம். இது **சீதாதலாவா** என்று கூறப்படும். இதற்கப்பால் சிறிது தூரத்திலுள்ள **பாலுகமா** என்ற இடம அநுமானால் எரியுண்டதென்று சொல்லப்படுகின்றது. பாலுகமா என்பதன் பொருள் பாழடைந்த கிராமம் என்பதாம். இந்த இடத்தில் புற்பூண்டும் முளைப்பதில்லை. ஹக்கலாவிலிருந்து ஹப்புத்தலை என்ற இடத்திற்குப் போகிற வழியில் வெளிமடா என்னும் அழகிய கிராமத்தின் பக்கத்தில் இராமலங்கா என்ற ஓரிடம் இருக்கின்றது. இங்கேதான் இராவணன் இறுதியாகப் போர் செய்து வீழ்ந்தான் என்றும், அதுமுதல் இவ்விடம் இராமலங்கா எனப் பெயர் பெற்றது என்றும் இங்குள்ள புத்த பிக்ஷுக்கள் ஒரு கர்ண பரம்பரையான ஐதிகத்தைக் கூறுகின்றார்கள். இதற்கருகில், தூரும்வெலா பன்சாலா என்ற இடத்தில் சீதாபிராட்டி தன் கற்பு நிலையினின்று தவறவில்லை என்று இராமபிரான் முன்னிலையிற் சத்தியம் செய்ததாக ஓர் ஐதிகம் வழங்கி வந்ததென்று **மேஜர் போர்ப்ஸ்** 1840-ம் ஆண்டில் வெளியிட்ட "இலங்கையிற் பதினோராண்டுகள்" என்ற தனது புத்தகத்திற் கூறியுள்ளார். இவ்வாங்கிலேயப் படைவீரர் நூறு ஆண்டுகளுக்கு முன் அடர்ந்த காடுகள் செறிந்திருந்த இம்மலைப்பிரதேசத்திற் குதிரை மேற் சென்று பல இடங்களைப்

பார்த்து ஆங்காங்கு இருந்த சிங்கள மக்கள் வாயிலாக இராமாயண சம்பந்தமான பல ஐதிகங்களைக் கேட்டு, அவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றார். இம் மலைப்பிரதேசத்தில் 'இராவண எல்லா' என்று ஒரு குன்று இருக்கின்றது. இதில் நீளமான ஒரு குகை உண்டு. இராவணன் தன் தலை நகரிலிருந்து அந்தரங்கமாக வெளிச்செல்வதற்கு இக் குகையை உபயோகித்து வந்தான் என்று சொல்லப்படுகின்றது.

மேற்கூறிய ஹக்கலா என்னும் இடத்தினின்று ஹப்புத்தலை என்னும் இடம் வரையிலுள்ள மலைப்பிரதேசம் எவருக்கும் வியப்பை உண்டாக்கக் கூடிய காட்சியைத் தருகின்றது. ஹக்கலாவினின்று பாலுகமாவுக்குச் சென்று, இம்மலைப் பிரதேசத்தின் உன்னதக் காட்சியை அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு, ஒருவித மருட்கை உணர்ச்சி உண்டாகிறது. மூன்று பக்கங்களையுடைய அகன்ற பிரதேசமாக இது காணப்படுகின்றது. மூன்று பக்கங்களிலும் செங்குத்தாக ஏறக்குறைய ஐயாயிரம் அடி உயரமுள்ள மலைத்தொடர்கள் பயங்கரத் தோற்றத்துடன் எழுகின்றன. இவற்றிற்கிடையில் முப்பது மைல் அளவு அகன்று ஒரு பதிந்த வள்ளம் போல் ஏறக்குறையச் சம பூமியாக இப்பிரதேசம் விரிந்து கிடக்கின்றது. இதன் மத்தியில்தான் இராவணன் போர் செய்து வீழ்ந்த இடமெனப்படும் இராமலங்கா இருக்கின்றது. இதன் எல்லைப் புறத்தில்தான் எரியுண்டதாகச் சொல்லப்படும் பாலுகமா இருக்கின்றது. இராமயணத்தில் இலங்கையைப் பற்றிய வர்ணனைகளைப் படித்தவர்களுக்கு இதுதான் திரிகூடபர்வதமெனறு ஐயமின்றி உடனே தோனறும்.

திரிகூடபர்வதத்தின் உச்சியில் இராவணனது தலைநகரமாகிய இலங்காபுரி விளங்கிற்றென்றும், இந்நகரம் நிலவில் ஆகாயத்தில் மிதப்பதுபோல் அநுமானுக்குத் தோன்றிற்றென்றும் இராமாயணம் கூறும். திரிகூடபர்வதத்தின மூன்றுபக்கங்களே இந்நகருக்கு இயற்கை மதில்களாக அமைந்திருந்தன. இக் காரணத்தால் இலங்காபுரியைப் பகைவர்கள் எவரும் அணுகமுடியாதென்று இராவணன் இறுமாந்திருந்தது வியப்பன்று. இப்பிரதேசத்தில் இப்பொழுதுள்ள பண்டாரவெலா, டியட்டலாவா என்ற நகரங்களும் இரவில் ஆகாயத்தில் மிதப்பனபோன்ற அழகிய காட்சியைத் தருகின்றன. இப்பிரதேசத்தின் தெற்கெல்லையாகிய ஹப்புத்தலையினின்று பகற்பொழுதில் தென்சமுத்ரத்தையும், அதன் பக்கத்தில் அம்பான்தோட்டத்திலுள்ள உப்பளத்தையும் பார்க்கலாம். இராமருடைய சேனை தென்சமுத்ரத்தின் கரையோரமாக வருவதை இராவணன் தலைநகரிலிருந்து பார்த்தான் என்று இராமாயணம் கூறுவது இப்பிரதேசத்தின் அமைப்புக்குப் பொருத்தமாகவே உள்ளது. இராமருடைய சேனை தென்சமுத்ரக் கரையிலுள்ள டொண்டிரா

(தேவேந்திர நுவரா) என்ற இடத்திலிருந்து மலைப் பிரதேசத்திலுள்ள அலுத்நுவரா என்னும் இடத்துக்குத் தேவர்கள் விழாவைப்போல, சூரிய சந்திரக் கொடிகளுடன் அணிவகுத்துச் சென்றதென்று ஹெத்தார கோறளையைப் பற்றிய ஒரு பழைய சாசனம் கூறுகின்றது. இதனின்று இராமர் சேனை இலங்காபுரிக்குச் சென்ற வழியைப்பற்றி இங்கு ஓர் ஐதிகம் இருப்பது புலப்படும். மலைத் தொடர்களை மதில்களாகக் கொண்ட இலங்காபுரியை இவ் வழியினாலேதான் அணுகக்கூடுமெனபதை இராவணனது சகோதரனாகிய விபீஷணனிடமிருந்து உளவறிந்து இராமர் சேனை இவ்வழியாகச் சென்றதென்று யூகிக்கக்கிடக்கின்றது.

அநுமான் இலங்காபுரியை அடைந்து சீதையைக் கண்டு பின் இராமரிடம் திரும்பும் காலத்தில், அரிஷ்ட பர்வதத்திற் சிறிது நேரம் தங்கியதாக வான்மீகி முனிவர் கூறுகின்றார். இப்பர்வதத்தைப் பற்றிய சான்று இந்நாட்டில் உள்ளது. அசோகன் மகனாகிய **மஹிந்தன் தேவானும்பிய திஸ்ஸா** என்ற இந் நாட்டு மன்னனைப் புத்த சமயத்துக்குத் திருப்பியபின், பௌத்த வழிபாட்டிற்குரிய இடங்களாகிய விகாரங்கள் அநுராதபுரத்திலும் அதன் பக்கத்திலும் கட்டப்பட்டன. அவ் விகாரங்களுள் ஒன்று 'அரிட்ட விகாரம்' என்று மஹாவம்சம் கூறும். இவ் விகாரம் இதற்கருகிலுள்ள ரிட்டிகலா என்ற மலையின் பெயரைத் தழுவியதாகும். 'கலா' என்ற சிங்களச் சொல் மலையைக் குறிக்கும். 'அரிஷ்டம்' என்ற சொல் அரிட்டம் என்று மருவி, பின் முதல் அகரம் காலகதியில் நழுவி, ரிட்டி என வந்ததென்று கூறப்படுகின்றது. இம் மலை இராமாயணத்துடன் சம்பந்தப்பட்டது என்பதை இங்குள்ளவர் அறியாராயினும், இராமாயணம் கூறும் இலங்கை இந் நாடுதான் என்று நிச்சயித்ததற்கு இம்மலையின் பெயர் ஓர் அரிய சான்றாக இருக்கின்றது.

இராவணன் வாழ்ந்த இடம் பாண்டிய நாட்டிற்கு எதிரில் இருந்ததாகச் சுக்ரீவன தன் சேனை வீரர்களுக்குக் குறிப்பிட்டதை வான்மீகி ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் 41-ஆம் சர்க்கத்திற காணலாம். அப்பகுதியின் மொழி பெயர்ப்பை இங்குத் தருகின்றோம்.

"அகஸ்திய முனிவரின் அநுக்ரகம் பெற்று...மகாநதியாகிய தாம்ரபர்ணியைக் கடப்பீர்களாக...அங்கிருந்து நடப்பீர்களாயின், பாண்டிய நகர துவாரத்தில் சுவர்ணமயமாகிய முத்துக்களால் அலங்காரம் செய்யப்பெற்று நன்கு நிர்மிக்கப்பட்ட பொற் கவாடத்தைக் காண்பீர்கள். அங்கிருந்து சமுத்ரதீரம் சென்று சீதையைத் தேடும் பொருட்டு சமுத்ரத்தைத் தாண்டும் விஷயத்தை ஆலோசித்து நிச்சயித்துக் கொள்வீர்களாக.. அங்கு சமுத்ர தீரத்தினிடையில் அகஸ்தியரால் வைக்கப்பட்ட மகேந்திரம் என்னும் பர்வதம் இருக்கின்றது....... அந்தச் சமுத்ர மத்தியில் இக்கரை

யில் நூறு யோசனை விஸ்தீர்ணமுடையதும் மனிதர்களுக்குப் போகமுடியாமல் மிக்க விளக்கமுற்றதுமாகிய ஒரு தீவு இருக்கின்றது. அந்தத் தீவு முழுமையும சீதாதேவியைத் தேடுங்கள். அந்தப் பிரதேசமே துர்ப்புத்தியும் இந்திரனையொத்த அழகுடையவனும், இராக்ஷதர்களுக்குப் பிரபுவும் நம்மால் வதைக்கத்தகுந்தவனுமாகிய இராவணனுக்கு வாசஸ்தானம்''.

இங்குப் பாண்டியருக்குப் பழைய தலைநகரமாயிருந்த கபாடபுரமும் அதனோடு தொடர்புற்ற மகேந்திர மலையும் குறிப்பிடப்பட்டுள்ளன. வான்மீகி முனிவர் இந்தச் சர்க்கத்தில் கூறியதையே தழுவி கமபநாடரும்,

தென்றமிழ்நாட் டகன்பொதியிற்
றிருமுனிவன் தமிழ்ச்சங்கஞ் சேர்கிற்பிரேல்
என்றுமவ னுறைவிடமா
மாதலினனம்மலையை யிறைஞ்சியேகிப்
பொன்றிணிந்த புனல்பெருகும்
பொருநையெனுந் திருநதியின் பொழியனாகக்
கன்றுவளர் தடஞ்சாரல்
மகேந்திரமா நெடுவரையுங் கடலுங்காண்டிர்

என்று செய்யுளியற்றியுள்ளார். கம்பர் காலத்துக்கு ஏறக்குறைய நூறாண்டுகளுக்குமுன் வடமொழியில் இயற்றப்பட்ட சம்புராமாயணம் இலங்கையை ''சிம்ஹளத்விபம்'' என்றே வெளிப்படையாகக் கூறுகின்றது.

தமிழ் நாட்டில் மிகப் பழைய காலந்தொட்டு இராமர் சேனை பாண்டிநாட்டைச் சார்ந்த சேது வழியாகத்தான் சென்றது என்ற கொள்கை இருந்து வருதற்கு ஒரு சான்று சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் 70-ஆம் செய்யுளிற் காணப்படுகின்றது. அது வருமாறு :—

வெனவேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிவரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறை கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே.

இராமர் பாண்டிநாட்டைச் சார்ந்த தனுஷ்கோடியில் ஓர் ஆலமரத்தின் கீழிருந்து இரகசிய ஆலோசனை நடத்திய செய்தி இங்குக் கூறப்படுகின்றது. இச்செய்யுள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேசுவரத்தில் இராமர் சிவபெருமானை வழிபட்டார் என்ற ஐதிகம் பன்னெடுங்காலமாகப் பரதகண்டம் முற்றிலும வழங்கி வருகின்றது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த சுவாமிகள் இந்த ஐதிகத்தை இராமேசுவரப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

''சேது'' என்ற பெயர் பிரசித்தமானது. இச்சொல் அணையைக் குறிக்கும். தனுஷ்கோடியினின்று இராமரின் சேனை கடலைக் கடந்து இலங்கை செல்வதற்கு அணை கட்டியதாகச் சொல்லப்படுவதால், தனுஷ்கோடிக்கு இப்பெயர் மிகப்

பழையகாலம் தொட்டு வழங்கி வருகின்றது. இவ்வணைக்குச் சான்றாக இப்பொழுதும் இவ்விடத்தினின்று இலங்கையைச் சேர்ந்த மன்னார்த் தீவு வரையில், மணல் திட்டுகளால் ஆகிய ஒரு தொடர் முப்பது மைல் தூரம் கடலிற் காணப்படுகினறது. இதை ஆங்கிலத்தில் 'ஆதாம் அணை' என்று கூறுவர். இவ்வணையைப் பற்றி 'என் சைக்ளோ பீடியா பிரிட்டானிகா' என்ற பல்பொருட் பேரகிராதியில் சில விவரங்களை அறியலாம். சில திட்டுகள் கடல் மட்டத்துக்கு மேலும், சில திட்டுக்கள் மூன்று அல்லது நாலடி ஆழத்துக்குக் கடலுள் அமிழ்ந்தும் இருக்கின்றன. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன இத்திட்டுகள் இடையீடின்றி ஒரே தொடராக இருந்தன என்றும், பின்னர் ஒரு கடுமையான புயல் வீசியபோது இவற்றில் இடையிடையே பிளவு ஏற்பட்டதென்றும் தெரியவருகின்றது. இயற்கையிலேயே அணைபோல்இருந்த இம் மணல்திட்டுத் தொடரை ஒரு சேனை கடக்கத்தக்கதாக இராமரின் பண்டைவீரர்கள் செய்தனரென்று கொள்ளுதல் தகும். இவ்வணை நூறுயோஜனை தூரமிருந்தது என்று வான்மீகி முனிவர் கூறுவதைக் கணக்கிட்டு இது நானூறு மைலுக்கு மேற்பட்டதாகையால், இப்பொழுது இலங்கை யென்று வழங்கப்படும் நாட்டிற்கு இக்கணக்கு பொருந்தாது என்று வாதிப்பார் உளர். வான்மீகி வேறு பல சந்தர்ப்பங்களிலும் காவிய ரீதியில் நூறு யோசனை என்ற பிரயோகத்தை அதிசயோக்தி அலங்காரமாகப் பன்முறை உபயோகிக்கின்றபடியால், இங்கு நூறுயோசனை என்பது அதிக நீளத்தைக் குறிக்குமென்றே கொள்ள வேண்டும்.

மேற்கூறிய மணல் திட்டுகள் ஆரம்பிக்கும் இடமாகிய சேதுக் கரையைத்தான் வான்மீகி முனிவர் மஹேந்திர துவாரம் எனக் கூறினரென்று யூகிக்க இடமுண்டு. மகேந்திரமலை சேது நாட்டினின்று திருச்செந்தூர் கன்யாகுமரி என்னும் இடங்கள் வரையில் பூமியில் அழுந்தியதாகச் சொல்லும் கந்தமாதனம என்கிற மலைத்தொடரைக் குறிக்கும் எனக் கொள்வதற்கு ஆதாரமிருக்கிறது. கன்னியாகுமரி பக்கத்தில் மகேந்திரம் என்ற பெயருடன் ஒரு மலை இப்பொழுதும் உளது. சேதுநாட்டிலுள்ள திருவுத்ரகோசமங்கையில் ஆகமம் வெளிப்படுத்தப்பட்டது என்ற திருவிளையாடல் ஐதிகத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

> மன்னு மாமலை மகேந்திர
> மதனில்
> சொன்ன ஆகமம் தோற்றுவித்
> தருளியும்

என்று குறிப்பிடுவதால், மகேந்திரம் சேதுநாட்டில் உள்ளது என்பது தெளிவாகின்றது.

இதுகாறும் காட்டிய ஏதுக்களால், இப்பொழுது இலங்கை என்று வழங்கும் இந் நாடே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை எனத் தீர்மானிக்கலாம்.

[இலங்கைத் தமிழ் விழா மலரிலிருந்து எடுக்கப்பட்டது-ஆசிரியர்]

அட்டைப்பட விளக்கம் :

"சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்!" என்றார் பாரதியார். சிங்களத் தமிழகத்துக்கும், இந்தியத் தமிழகத்துக்குமிடையே "தமிழ்ப் பண்பாடு" என்ற பாலம் பண்டுதொட்டே இருந்து வருகிறது. ஆனால், இந்தியத் தமிழர்கள் அந்தப் பாலத்தைப் பயன்படுத்தி சிங்களத் தமிழர்களோடு கலாச்சார உறவு கொள்ளாதிருந்தனர். தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் இந்தக் குறையைப் போக்கிவிட்டனர். ஏப்ரல், மே மாதங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் கூடியிருந்த ஜனத்திரளின் ஒரு பகுதியை 'முரசு' அட்டைப்படத்தில் காணலாம். தாய்நாட்டுப் புலவர்களின் பேச்சைக் கேட்கவும், அவர்களுடன் அளவளாவி உறவாடவும் சேய்நாடான யாழ்ப்பாணத் தமிழர்கள் கொண்டிருந்த ஆவல் அளவிடற்கரிது. விழா நடைபெற்ற மூன்று நாட்களிலும் எந்த நாள் விழா சிறப்புடையது என்று சொல்லமுடியாதவாறு நாள்தோறும் இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்து விழாவைச் சிறப்பித்தனர். யாழ்ப்பாணத்தில் கதிரவன் கொடுமை அதிகமாக இருந்தும் குறித்த நேரங்களில் நிகழ்ச்சிகள் தவறாது நடைபெற்றன. அதற்குக் காரணம் யாழ்ப்பாணத் தமிழர்களின் பேரார்வம் என்றால் மிகையன்று. யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும், இந்தியத் தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ள இந்தத் தொடர்பு என்றென்றும் நின்று நிலைபெறுவதாக!

— ஆசிரியர்

காங்கிரசைக் கலைப்பதா ?

அரசியல் சுதந்திரம் பெற்ற பிறகு காங்கிரஸ் கட்சி கலைந்து போவதா? இல்லை. முக்காலுமில்லை. அதற்கு மாறாக இந்தக் கட்சி, அதிகாரத்தையும் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு தன்னுடைய நிர்மாண வேலைத் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் காங்கிரஸ் கட்சி தன்னுடைய ஸ்தானத்தைக் கௌரவமாக வகித்ததுபோலாகும். அப்படிக்கின்றி, இந்தக் கட்சி பலவந்தமாக கலைக்கப்பட்டு விடுமானால் குழப்பந்தான் உண்டாகும். ஐரோப்பிய மகா யுத்தத்துக்குப் பிறகு ஒழுங்கான முன்னேற்றத்தைக் கண்டுள்ள எல்லா நாடுகளிலும், எந்தக் கட்சியானது அதிகாரத்தைக் கைப்பற்றியதோ அந்தக் கட்சிதான் தேசியப் புனருத்தாரண வேலையிலும் ஈடுபட்டிருக்கிறது.

[ஹரிபுரா காங்கிரஸ் தலைமையுரையில் நேதாஜி கூறியது.]

மதிப்புரை

''ஜெய் பாரத்'' (வாரவெளியீடு):

ஆசிரியர்: கே. ஆர். கலியாண ராமய்யர்; இராணிப் பேட்டை (வ. ஆ.). விலை இரண்டணா.

விடுதலைப் போரில் ஈடுபட்டு பலனை எதிர்பாராது பல்லாண்டுகள் பணிபுரிந்த தேச பக்தரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ஏடு. ''காந்திய நெறிகளைப் பரப்புவதே குறிக்கோள்'' என்கிறார் ஆசிரியர். ''ஜெய் பாரத்'' என்ற பெயரிலுள்ள சொற்களும், ஒலியும் தமிழோடு ஒட்டாது ஒதுங்கி நிற்பினும், தமிழ் மக்களிடையே உலாவ வேண்டியிருப்பதால் தமிழின் வளர்ச்சிக்கும் இவ்வேடு பணிபுரியுமென நம்புகிறோம்.

''மக்கள் நாடு'' (வார இதழ்):

ஆசிரியர் குடந்தை எஸ். டி. பானு; 132, பிராட்வே; விலை அணா ஒன்று.

தேசியத்திற்கு எதிராக நடத்தப்பட்டுவரும் தீமைதரும் பிரசாரங்களை குறிப்பாக திராவிடத்தாரின் கூச்சலை ஒடுக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு வெளிவருகிறது. ஆசிரியர், பொது மக்களோடு தொடர்பு கொண்டுள்ள பேச்சாளராதலால், நாட்டு மக்கள் நலங்கருதி நடத்தப்படுமென்பதில் ஐயமில்லை. தமிழ் மக்கள் ஆதரிக்கக் கோருகிறோம்.

மாறுவேடத்தில் கம்யூனிஸ்டுகள்:—

எழுதியவர்: வி. ஆர். ராதாகிருஷ்ணன்; சோஷலிஸ்ட் பதிப்பகம், சென்னை. விலை அணா 3.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, ஆரம்பமுதல் இன்றுவரை கடைப்பிடித்துவந்துள்ள நடைமுறைகள் தேசியத்துக்கும் ஜனநாயகத்துக்கும் விரோதமானவை: சர்வாதிகாரப் போக்குடையவை என்று குறைகூறுகிறார் ஆசிரியர். அவற்றிற்கான ஆதாரங்களையும் தந்திருக்கிறார். 'இந்தியாவுக்கு ஏற்றது ஜனநாயக சோஷியலிசக் கொள்கை ஒன்றே' என்றும் உறுதி கூறுகிறார்.

திராவிடத் தொத்து நோய்:—

எழுதியவர்: ர. சண்முகம்; வெளியிட்டோர்: அரசியல் நூலகம்; திருவல்லிக்கேணி சென்னை-5. விலை இரண்டணா.

திரு. ர. சண்முகம், திராவிட மாயையில் சிக்கியுள்ள தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய அறிவுரையே இந்நூல். திராவிட இயக்கத்தால் முற்போக்கு இயக்கங்கள் வளர்ச்சியடைய முடியாமலிருப்பதையும், 'புரட்சி' 'சீர்திருத்தம்' போன்ற கவர்ச்சிகரமான வார்த்தைகளை திராவிடத்தார்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் விளக்கியுள்ளார் ஆசிரியர். திராவிட இயக்க எதிர்ப்பாளரேயன்றி, திராவிட இயக்கத்தவரும் படிக்கவேண்டிய நல்ல நூல்.

இலக்கியத்திலும் பித்தலாட்டமா?:—

எழுதியவர்: கவிஞர் கா. மு. ஷெரீப்; சமுதாயப் பதிப்பகம், சீரங்கபாளையம், சேலம்.

ஷெரீப், கவிஞர் மட்டுமல்ல; தமிழரசுக் கழகத்தின் சிறந்த பேச்சாளர்களிலொருவர்; இலக்கிய ஞானமுடையவர். திருவள்ளூர் தமிழ் இளைஞர் கழகத்தின் சார்பில் திருக்குறள் வகுப்பு துவக்க விழா நடந்தபோது கவிஞர் ஷெரீப் ஆற்றிய சொற்பொழிவே இந்நூல்.

திராவிட இயக்கத்தார், தமிழ் இலக்கியங்கள் எதிலும் நம்பிக்கையற்றவர்கள்; கம்பன் காவியத்தை எரிப்பார்கள்; இளங்கோவின் சிலப்பதிகாரத்தைப் பழிப்பார்கள்; வள்ளுவர் குறளையும் வசைபாடினார்கள் ஒரு காலத்தில்; இப்போது வாழ்த்துகிறார்கள். ஆனால் வள்ளுவருக்கு பெருமைதேடவோ அவர்

வருத்த ஒழுக்க நெறிவழி மக்களை வாழச் செய்யவோ பாடுபடுவதில்லை. திருக்குறளுக்கு தங்கள் விருப்பம்போல் விளக்கவுரை கூறிக்கொண்டு தங்களுக்குப் புகழும் பொருளும் தேடிவருகிருர்கள். இந்தத் தவருன போக்கை நன்கு விளக்கிக் காட்டியிருக்கிருர் கவிஞர் ஷெரீப். ஒவ்வொரு மாணவர் கையிலும் இருக்கவேண்டிய நூல்.

சிந்தனைச் செல்வம் :—

இயற்றியவர் : பாலயோகி; வெளியிட்டோர் : தென்றல் மன்றத்தார், கூத்தாநல்லூர். பக்கங்கள் 24, விலை அணு 4.

சிந்தனைக்குரிய பல்வேறு விஷயங்களை இந்நூலில் சித்தரித்திருக்கிருர் ஆசிரியர். வாழ்க்கைக்குப் பயன்படும் கருத்துக்கள் நிறைய உள.

நலிகின்ற செல்வம் :—

இயற்றியவர் : சுசிலா குருசாமி; வெளியிட்டோர்:பொதிகைப் பதிப்பகம், புதுப்பாளையம், கடலூர் என். டி. பக்கங்கள் 56, விலை 12 அணு.

பல பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதி வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கியிருக்கிருர் ஆசிரியர். திரு. ம. பொ. சி. அவர்களுக்கு இந்நூல் காணிக்கையாக்கப்பட்டிருக்கிறது. 'நலிகின்ற செல்வம்' என்ற தலைப்புடைய முதல் கட்டுரை, பாடுபட்டும் பலனறியாத கோடானுகோடி உழைப்பாளி மக்களின் உள்ளக் குமுறலைப் படம் பிடித்துக் காட்டுகிறது. 'திருமகள் சிறியவள்' என்ற கட்டுரையில், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு வழி வகைகள் கூறப்படுகின்றன. 'தமிழன் பள்ளி எழுச்சி' என்ற கட்டுரையில், நாட்டுக்கு சுதந்திரம் வந்தும், மக்கள் சுகவாழ்வு பெருத சீர்கேடு சித்தரிக்கப்படுகிறது. நல்ல சுவை மிக்க தமிழ் நடை. நூல் முழுவதும் இலக்கிய எடுத்துக்காட்டுகள் நிரம்பியுள்ளன. எல்லோரும் படிக்கத் தக்க நல்ல நூல். பள்ளிகளிலும், பாடமாக வைத்தால் மாணவர்கள் பயனடைவர்.—அனுஜன்.

மகாத்மா மணிவாக்கு

முத்திக்கு வழி எங்கே இருக்கிறதென்ருல், எனது தேசத்திற்காகவும் மானிட ஜாதிக்காகவும் ஓயாமல் தொண்டு செய்துகொண்டிருப்பதில்தான்.

ஃ ஃ ஃ

மதம் கலவாத அரசியல், மரணப்பொறி மாதிரி. ஏனென்ருல், அந்த அரசியல் ஆத்மாவையே கொன்றுவிடுகிறது.

ஃ ஃ ஃ

என் கண்களை நீங்கள் பிடுங்கிவிடலாம்; அஃது என்னைக் கொல்லாது. என் மூக்கை நறுக்கிவிடலாம்; அஃது என்னைக் கொல்லாது. ஆனல், கடவுளின்மீது எனக்குள்ள நம்பிக்கையைப் பிரித்துவிடுங்கள்; நான் இறந்துபட்டவன்தான்.

தமிழ் முரசு

ஆண்டு சந்தா ரூபாய் மூன்று.

வெற்றி முரசு கொட்டடா!

அ. சுருளியாண்டிப்பாவலர்.

★

பல்லவி

கொட்டடா! கொட்டடா!
வெற்றிமுரசு கொட்டடா!

அநுபல்லவி

கட்டில்லாத மீட்சிகொள்ளக் கங்கணம் புனைந்தனம!
மட்டில்லாத தமிழராட்சி வந்ததென்று கொட்டடா! (கொ)

சரணங்கள்

எட்டுத்திசையும் வெற்றிச்செய்தி எட்டுமாறு கொட்டடா!
எழுதுவீரர் வீறுகொண் டெழுந்தசெய்தி கொட்டடா!
பட்டதுன்பம் போதுமின்று பதைத்தெழுந்து நின்றனம!
படைதிரட்டிப் பகையனைத்தும் முறியடித்து வென்றனம!

(கொட்டடா!)

ஒப்பில்லாத தமிழராட்சி உயர்கவென்று சொல்லடா!
உலகனைத்தும் புகழுமாறு உறுதியாக நில்லடா!
இப்புவியில் யாரெதிர்த்து வந்துநின்ற போதிலும்
என்றும் பின்னடைந் திளைத்திடாமல் நீயும் வெல்லடா!

(கொட்டடா!)

தொழிலாளராட்சி மலர வேண்டும்

(திரு. ம. பொ. சி. சென்னை வானொலியில் பேசியது)

இந்தியா, முடியரசுக்கு முடிவு கட்டி குடியரசுக்கொள்கையை ஏற்றுக்கொண்டு விட்டது. "குடிவாழ்வு மேன்மையுறப் பாடுபடுவதே பூத்துள்ள புதிய குடியரசின் கொள்கை" என்று கூறுகிறது அரசியல் அமைப்பின் முன்னுரை. வயது வந்தோர் அனைவருக்கும் அரசாள்வோர் பரிசளித்துள்ளனர். அப்பரிசு, வாயினிக்கும் பண்டமன்று; வாழ்க்கையினிக்க வழி வகுக்கும் வாக்குரிமை.

மண் குடிசையில் வாழும் உழைப்பாளி மக்கள் வோட்டுரிமை பெற்றது மாளிகைச் சீமான்களை மந்திரிகளாக்குவதற்கன்று. தங்களைத் தாங்களே ஆண்டு கொள்வதற்காகும். பல கோடி உழைப்பாளிகளின் வோட்டுக்களைப் பெற்று சில நூறு பணக்காரர்கள் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுங் காலம் மறையவேண்டும். இனியும் அதை அனுமதிப்பது குடியரசுக் கொள்கையை அவமதிப்பதாகும்.

இந்தியாவுக்கு ஜனநாயகம் புதிதன்று; பழைமையானதே. இதன் உண்மையை இலக்கியங்களில் காணலாம். என்றாலும், முடியரசு கால ஜனநாயக முறைக்கும், இருபதாம் நூற்றாண்டு குடியரசு ஜனநாயகத்திற்கும் அதிக வேற்றுமை உண்டு. மேலும், சுமார் ஆறு நூறு ஆண்டுகள் மதக் குழப்பங்களாலும் இருநூறு ஆண்டுகள் அரசியல் அடிமைத்தனத்தினாலும் அல்லல்பட்ட இந்திய மக்களுக்கு ஜனநாயக அரசியல் மிகப் மிகப் புதிதாகும். சாதிப் பற்றும், சமய உணர்வும் புதிய அரசியலில் சட்டப்படி அங்கீகரிக்கப்படவில்லையானாலும், இந்த வேற்றுமைகளும் அவற்றினூடே வளர்ந்துவரும் விரோதங்களும் இன்றைய இந்தியாவில் இருந்தே வருகின்றன. இவற்றிற்கெல்லாம் முடிவு கட்ட வேண்டியது பாட்டாளி மக்களின் முக்கிய கடமையாகும்.

அதுமட்டுமல்ல; ஜனாதிபதி பதவி முதல் மாகாண-மத்திய அமைச்சர் பதவிகள் வரையுள்ள எல்லாப் பதவிகளையும் தொழிலாளர்களே கைப்பற்றும் நாள் தோன்ற வேண்டும். உழைத்துப் பிழைக்கும் தொழிலாளர்களுக்கு ஊராளும் திறமையுண்டா? என்று மலைக்கும் காலம் மலையேறிப்போக வேண்டும். அரசியல் நெறி கூறும் திருக்குறள் எழுதிய திருவள்ளுவர் யார்? இழை நக்கி நூல் நெருடிய ஏழைத் தொழிலாளி அல்லவா! மன்னாதி மன்னர்களும் கண்டவுடன் தெண்டனிடும் பேறு பெற்ற ஔவை எந்தக் கல்லூரியில் பட்டம் பெற்றாள்? புதிய

குடியரசின் கொள்கை பாட்டாளி வர்க்கத்தின் நலத்தை நாடுவதாக இருக்குமே ஒழிய, அதற்கு மாறான வகையில் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. குடியரசு மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் இருப்பார்களேயன்றி, மதங்களின் பிரதிநிதிகளோ அல்லது மாளிகைச் சீமான்களின் பிரதிநிதிகளோ இருக்கமாட்டார்கள். ஆம்; மதவாதிகளுக்கு தனித்தொகுதியும், சொத்துரிமையாளர்களுக்கு விசேஷ தொகுதியும் இனி இரா. ஆனால், பாட்டாளி மக்கள் இதோடு திருப்தியடைந்து விடக்கூடாது. நாளடைவில், மாகாண-மத்திய பாராளுமன்றங்களுக்குத் தொழில்வாரி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

பிறந்துள்ள குடியரசு சமதர்மத் தொழிலரசாக மலரவேண்டுமானால், தொழிலாளர்களும் தொழிற் சங்க நிர்வாகிகளும் தங்கள் தங்கள் தொழில் நுட்பங்களையும் அரசியல் அறிவையும் பெருக்கிக்கொள்ள வேண்டும். நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கடமை உணர்ச்சியையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த மகத்தான பொறுப்பை அவர்கள் நன்கு உணர்ந்து நடைமுறையில் நடத்திக்காட்ட வேண்டும். பாட்டாளி மக்கள் முயன்றால் முடியாத காரியம் அல்ல. தேசத்தின் பொருளாதார வாழ்வுக்கு தொழிலாளர்களே முதுகெலும்பு போன்றவர்கள். எனவே, அவர்கள் தம் கடமையைப் பரிபூரணமாக நிறைவேற்றினால் இன்றைய குடியரசு தொழிலாளர் அரசாக மலரும் காலம் வெகு தூரத்திலில்லை.

மாகாண அரசுகள் அந்தந்த மாகாண மொழியிலேயே நடத்தப்படும்போதுதான் பாட்டாளி மக்கள் பாராளும் திறமை பெற முடியும். மொழிவாரிமாகாணம் விரைவில் அமைய இருப்பதால், பாட்டாளி மக்கள் இப்பொழுதிருந்தே தாய்மொழி மூலம் தங்கள் அரசியல் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். நாடாளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க உரிமைபெற்றிருந்தால் போதுமா? நாடாளும் திறமையும் தங்களுக்குண்டு என்பதைத் தொழிலாளர்கள் புலப்படுத்தவேண்டும்.

பாட்டாளி மக்கள், தங்களுக்குக் கிடைத்துள்ள வாக்குரிமையைத் தவறாமல் தக்க வகையில் பயன்படுத்த வேண்டும். தாம் அருமையாகப் பெற்ற வாக்குரிமையைத் தேர்தலில் பயன்படுத்தத் தவறுபவர்கள், தங்களுக்கும் நாட்டுக்கும் தீங்கிழைத்தவர்களாவார்கள். நமது குடும்பத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நாம் நெருக்கமாகத் தொடர்பு கொள்கிறோமல்லவா? அதுபோலவே, நாட்டின் அரசாட்சியிலும் நாம் சிரத்தையோடு தீவிரப் பங்கு கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். நாடு என்பது பெரிய குடும்பம் போன்றதாகும். அந்தப் பெரிய குடும்பத்தின் வாழ்வு தாழ்வுகளில்தான் அதனிற் சிறிய வீட்டுக் குடும்பத்தின் வாழ்வு தாழ்வு அடங்கியிருக்கிறது. எனவே, நாட்டுக்

குடும்பத்தை நல்ல முறையில் அமைப்பதில் பங்குகொள்ளத் தவறுபவன் தன்னை அறியாமலே தன் வீட்டுக் குடும்பத்தையும் கெடுத்துக்கொள்கிறான்.

குடியாட்சியில் வாக்காளர்களின் பொறுப்பு தேர்தலில் ஓட்டளிப்பதோடு தீர்ந்து விடுவதில்லை. தங்கள் வாக்கைப் பெற்ற அபேட்சகர் எப்படி நடந்து கொள்கிறார் என்பதைக் கண்காணித்து வரவேண்டும். நாட்டு மக்களின் வாழ்வு, யார் ஆளுகிறார்கள் என்பதைப் பொறுத்து மட்டும் இல்லை. எப்படி ஆளுகிறார்கள் என்பதையொட்டியும் அமைகின்றது.

ஒரு கட்சியின் லட்சியம் நல்லதாய் இருந்தால் மாத்திரம் போதாது. அந்த லட்சியத்தை அடைவதற்காக அது கடைப்பிடிக்கும் நடை முறையும் தூயதாய் இருக்கவேண்டும். இல்லையேல், நல்ல லட்சியம் உள்ள கட்சியால்கூட நாட்டுக்குத் தீமை விளையலாம். சான்றாக, ஒரு கட்சியின் லட்சியம் சமூகத்தின் அடிதளத்திலுள்ள உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக இருக்கலாம். ஆனால், அந்தக் கட்சி, உயிரிழக்கத்துணிந்த ஒரு சில இளைஞர்களின் மூலம் ஆயுத பலத்தால் அல்லது அன்னிய நாட்டின் படை பலத்தால் ஆட்சியைக் கைப்பற்றும் நடைமுறைத் திட்டம் உடையதானால், அந்தக் கட்சிக்கு ஆதரவளிப்பது நாட்டுக்குத் தீமை பயப்பதாகும். பிரசாரத்தின் மூலம் மக்களைத் தம் வயப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்று எந்தக் கட்சிக்கும் உரிமை உண்டு. குடியரசுச் சட்டத்தில் அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் வளர்வதற்கு இது பெரிதும் பயன்படும். ஆனால், பலாத்காரத்தில் நாட்டங்கொண்டு, கொலை-கொள்ளை போன்ற கொடுமைகள் மூலம் அரசைக் கைப்பற்ற முயல்வது நாட்டின் நலத்துக்கு மட்டுமன்றி, தொழிலாளி வர்க்கத்தின் நல்வாழ்வுக்கும் கேடு விளைவிப்பதாகவே முடியும்.

ஜனவரி 26-ல் மலர்ந்துள்ள மக்கள் அரசு, மகாத்மா காந்தியின் உழைப்பின் பலனாகும். அண்ணல் காந்தியடிகளின் பூத உடல் மறைந்தாலும் அவரது ஆவி நம்மைச் சூழ்ந்து நின்று நமது செயல்களைக் கண்காணித்து வருகிறது.

மனிதனை மனிதன் சுரண்டிப் பிழைக்கும் கொடுமை தொலையாதா?

பணம்படைத்தவனுக்கு ஒரு நீதி, பாடுபட்டு உழைப்பவனுக்கு இன்னொரு நீதி என்ற அநீதிகள் மறையாதா?

படித்தவர், பாமரர் என்ற பேதமொழிந்து கல்லாருமில்லை; கல்வி முற்ற வல்லாருமில்லை என்ற நல்ல நிலை தோன்றாதா?

நாட்டுக்கு நாடு சண்டையின்றி சமரசயாக-உலகம் ஒரு குடும்பமாக வாழ வழி பிறக்காதா?

இவைதான் உயிர் வாழ்ந்த காலமெல்லாம் அண்ணலின் உபதேசமாக இருந்தது.

தொழிலாளி மக்களே! எந்த மகானின் உழைப்பால் நாம் வோட்டுரிமை பெற்றோமோ அந்த மகானின் உபதேசங்கள் நிறைவேறும் வகையில் அதைப் பயன்படுத்துவோமாக.

வாழ்க தொழிலாளி வர்க்கம்!

தமிழ் முரசு

[ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்]

★

மகிழ்ச்சிகரமான செய்தி

மாத வெளியீடாக வந்துகொண்டிருக்கும் "தமிழ் முரசு", ஆகஸ்டு முதல் வாரத்திலிருந்து வார இதழாக வெளிவரும்.

தனிப்பிரதி இரண்டணா.

ஆண்டு சந்தா ஆறு ரூபாய்.

எல்லா இடங்களுக்கும் முன்பணத்துடன் ஏஜண்டுகள் தேவை. உடனே எழுதி பதிவு செய்துகொள்ளுங்கள்.

நிர்வாகி,

"தமிழ் முரசு" அலுவலகம்
1-29, இருசப்ப கிராமணி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

Edited, Printed & Published by M. P. Sivagnanam at the Kannagi Achagam, 1-22, Irusappa Gramani Street, Triplicane MADRAS-5.

பதிவு எண் M. "TAMIL MURASU"

தங்க நகைகள்

சிறந்தவை

KR

சீல்

கே. ஆர் & சன்ஸ்

பெரியகடை வீதி, கோயமுத்தூர்